## மாமன்றக் கூட்டம்

**கோப்பு எண்** - **ந.க.எண் 12167 /2018/ எம்.சி. 8 )**

**நாள்** - **13.12.2018 மாலை 4.00 மணி**

**தலைமை** - **டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**கலந்துகொண்டோர்** - **துணை ஆணையர்,**
**அனைத்து துறை தலைமைகள்,**
**அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்**

---

### பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளான குறிச்சி மற்றும் குனியமுத்தூர் (வார்டு எண் 87 முதல் 100 வரை) அம்ரூத் (2016–17) திட்டத்தின் கீழ் புதைவடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கு அரசாணை நிலை எண். 111, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC2) நாள். 25.10.2017 வாயிலாக ரூ. 442.00 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதன்பேரில், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை (TNUIFSL) மூலம் ரூ. 578.77 கோடிக்கு மதிப்பிடப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்குப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலைகுறைபாடுகள் (physical and price contingencies) காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகள் படி ரூ. 591.14 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு, இத்திட்டத்திற்கான நிதி இயலுமைத்தன்மை அறிக்கை (Finance viability) தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் ((TNUIFSL) மூலம் கணக்கிடப்பட்டு பின்வருமாறு அம்ரூத் திட்டத்தின் கீழ் இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசால் மான்யம் வழங்கப்பட உள்ளது.

1. ஆசிய வளர்ச்சி வங்கி : திட்ட மதிப்பீடு ( (ரூ. கோடியில்)

| | |
|---|---|
| Contract Package Cost including GST @ 12% (Base cost) | 476.84 |
| Labor Welfare Fund (1% of Base Cost) | 4.77 |
| Physical Contingencies | 23.84 |
| Price Contingencies | 39.47 |
| Provisional Items (Utility Shifting,resettlement Etc.) | 46.22 |
| Total Sub Prospect Cost | 591.14 |

2. இயக்குதல் மற்றும் பரரமரித்தல் : ஒரு ஆண்டிற்கு ரூ. 998.10 இலட்சம் (Completion of the project)
3. நிதிநிலைப்பு தன்மை (Connections, Deposits & Tariff) இணைப்புகள், வைப்புத் தொகை மற்றும் கட்டணம்)

| Details | Existing | | Proposed | |
|---|---|---|---|---|
| | Domestic | Non-Domestic | Domestic | Non-Domestic |
| Connections(nos.) | - | - | 67955 | 1713 |
| Wt. Average Deposit (Rs.) | - | - | 7018 | 20569 |
| Wt. Average Tariff Rs./month | - | - | 171 | 653 |

இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை அவர்களது கடித எண் TNUDF / Projects / TNUFIP / Coimbatore UGSS, நாள் 07.12.2018 தேதிய கடிதத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் (ADB assisted TamilNaau Urban Flagship Investment Program - TNUFIP – Tranche 1 ) மூலம் புதைவடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கு பின்வரும் நிதி இயலுமைத் தன்மை மற்றும் கட்டணங்களை நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய வவர்ச்சி வங்கி நிதியுதவியுடன் (ADB assisted TamilNaau Urban Flagship Investment Program - TNUFIP – Tranche 1) மூலம் புதைவடிகால் திட்டம் செயல்படுத்த நிதி இயலுமை அறிக்கை (Finance Viability Report) மற்றும் நிதி ஆதாரம் ஆகியவை கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அ) நிதி ஆதாரம்**

| Sl.No | Details | Amount (Rs. in crore) | Percentage |
|---|---|---|---|
| 1. | GoI Share under AMRUT | 145.86 | 24.67% |
| 2. | GoTN Share under AMRUT | 88.40 | 14.95% |
| 3. | Loan from TamilNadu Urban Development Fund (TNUDF) under ADB assisted TNUFIP(T-1) | 106.41 | 18.00% |
| 4. | Grant from Project Sustainability Grant Fund (PSGF) under ADB assisted TNUFIP (T-1) | 183.34 | 31.01% |
| 5 | ULB Contribution | 67.13 | 11.36% |
| | **Total** | | **100.00%** |

**அ) நிதி நிலைப்பு தன்மை (Proposed Deposit & Tariff)**

| Area in Sq.ft | Proposed Deposit (Rs.) | | Proposed **Tariff (Rs./month)** | |
|---|---|---|---|---|
| | **Domestic** | **Non-Domestic** | **Domestic** | **Non-Domestic** |
| <500 | 7500 | 15000 | 100 | 300 |
| 500-1200 | 10000 | 20000 | 140 | 420 |
| 1200-2400 | 12500 | 25000 | 180 | 540 |
| 2401* | 15000 | 30000 | 220 | 660 |
| **Weighted Average** | **8891** | **24982** | **122** | **540** |
| *This is the base rate for the plinth area of 2401 sq.ft. The deposit and tariff for plinth area above 2401 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | |

ii) திட்ட மதிப்பீட்டில் 11.36 % தொகையானது மாநகராட்சி பங்களிப்பாக ரூ. 67.13 கோடி திட்ட பணிகளின் கட்டுமான பணிகள் நடைபெறும் போது மாநகராட்சி பங்களிப்பு செலுத்தப்பட வேண்டும்.

iii) ஒவ்வொரு 5 வருடத்திற்கும் 10% சதவீதம் வைப்புத் தொகை கட்டணம் மற்றும் சேவைக்கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும்.

iv) திட்ட பணி கட்டுமானம் நடைபெறும் போது மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வட்டி செலுத்தப்பட வேண்டும்.

v) இனி வரும் காலங்களில் வரி வசூலானது 85% குறையாமலும் அல்லது அதற்கு மேல் வரிவசூல் செய்யப்பட வேண்டும்.

vi) குடிநீர் மற்றும் வடிகால் நிதி பற்றாக்குறையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்யப்பட வேண்டும்.

இதனைத் தொடர்ந்து, முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை அவர்களது கடித எண் TNUDF / Projects / TNUFIP / Coimbatore UGSS, **07.12.2018** தேதிய கடிதத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் (ADB assisted TamilNaau Urban Flagship Investment Program - TNUFIP – Tranche 1 ) மூலம் புதைவடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கு TNUFIP ஒப்புதல் குழு மூலம் அனுமதி பெறுவதற்கும், பரிந்துரை செய்வதற்கும், அரசின் நிர்வாக அனுமதி பெறுவதற்கும், இத்திட்ட பணிக்கு கடன் உதவி பெறுவதற்கும் மற்றும் அதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை அனுப்பி வைப்பதற்கும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. முதன்மை செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை அவர்களது கடித எண் TNUDF / Projects / TNUFIP / Coimbatore UGSS, நாள் **07.12.2018**ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகள் ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண். 2710 / 2012 / ப.வ (எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 466 நாள் 13.12.2018**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 2**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 24க்குட்பட்ட காந்தி பூங்கா வளாகத்தில் புல்வெளிகள் மற்றும் மின் விளக்குகள் போன்ற வசதிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.74,90,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம் ந.க.எண். 11463 /18/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 467 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 24க்குட்பட்ட காந்தி பூங்கா வளாகத்தில் செயற்கை நீரூற்று மற்றும் கூடுதல் அபிவிருத்தி செய்தல் பணிக்கு ரூ74,80,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம் ந.க.எண். 11464 /18/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 468 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் - வார்டு எண். 24 க்குட்பட்ட சுப்பிரமணியம் சாலையில் உள்ள காந்தி பூங்காவினுள் உள்ள நடைபாதை தளங்கள் பழுதடைந்துள்ளதால் அதனை சரிசெய்து தரும்படி பொது மக்கள் கேட்டக்கொண்டதற்கிணங்க காந்தி பூங்காவில் உள்ள நடைபாதை தளத்தினை அகலப்படுத்தி புதியதாக நடைபாதை தற்கள் அமைக்கும் பணிக்கு ரூ. 73,00,000 /- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம் ந.க.எண். 11732 /18/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 469 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - நெகிழி(பிளாஸ்டிக்) ஒழிப்பு- நெகிழி (பிளாஸ்டிக்) கழிவு மேலாண்மை விதிகள் 2016 – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு துணை விதிகள் ஏற்படுத்துதல் - துணை விதிகள் மன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

---------

நெகிழிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 50 மைக்ரானுக்கு குறைவான நெகிழி பொருட்கள் மற்றும் ஒரு முறை பயன்படுத்தும் நெகிழி பொருட்கள் முற்றிலும் தடை செய்வது, விதி மீறுபவர்களுக்கு அபராதம் விதிப்பது, 50 மைக்ரானுக்கு அதிகமான கனம் உள்ள அனுமதிக்கப்பட்ட நெகிழிப் பைகளை விநியோகம் செய்யும் நிறுவனங்களை மாநகராட்சியில் பதிவு செய்வது, கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிப்பது தொடர்பாக நெகிழிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் ஏற்படுத்த 27.06.2017-ம் தேதிய ஆணையாளர் அவர்களின் உத்தரவின்வாயிலாக நெகிழி (பிளாஸ்டிக்) மேலாண்மை குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் மேற்படி நெகிழிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மேற்படி நெகிழி கழிவு மேலாண்மை துணை விதிகளுக்கு மன்றத்தின் அனுமதி மற்றும் அவ்விதிகளை நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

## COIMBATORE CITY MUNICIPAL CORPORATION

## PLASTIC WASTE MANAGEMENT BYE-LAWS, 2016

### Notification

In exercise of the powers conferred by sections 6, 8 and 25 of the Environment (Protection) Act, 1986 (29 of 1986), the Central Government have enacted the Plastic Waste Management Rules, 2016 to regulate the management of Plastic Waste.

By virtue of the authority given in Rule 6 (4) of the Plastic Waste Management Rules, 2016 made in exercise of the powers conferred by sections 6, 8 and 25 of the Environment (Protection) Act, 1986 in order to organise &regulate the management of Plastic Waste in Coimbatore City Municipal Corporation and in view of the Plastic Waste Management Rules, 2016 issued in public interest by the Ministry of Environment, Forest and Climate Change, Government of India on 8 th April 2016, the Coimbatore City Municipal Corporation hereby frames the following byelaws for the management of Plastic Waste.

## PLASTIC WASTE MANAGEMENT BY LAWS OF THE COIMBATORE CITY MUNICIPAL CORPORATION,

**1.0** **Title:** These byelaws shall be called the Coimbatore City Municipal Corporation Plastic Waste Management Bye-Laws, 2016. And they shall come in to force on the date of these publication in the official gazette.

**2.0** **Extent of application:** These byelaws apply to every waste generator, manufacturer, Importers and producer within the limits of Coimbatore City Municipal Corporation.

**3.0** **Definition:** In these Bye-law and the Schedule attached thereto, the words and expressions used but not defined shall have the meanings respectively assigned to them in The plastic waste management Rule 2016, unless the context otherwise requires,-

(a) **“Act”** means the Environment (Protection) Act, 1986 (29 of 1986);

(ab) **“Alternate use”** means use of a material for a person other than for which it was conceived, which is beneficial because it promotes resource efficiency,

(b) **“Brand owner” means** a person or company who sells any commodity under a registered brand label.

(c) **“carry bags”** mean bags made from plastic material or compostable plastic material, used for the purpose of carrying or dispensing commodities which have a self carrying feature but do not include bags that constitute or form an integral part of the packaging in which goods are sealed prior to use.

(d) **"commodity"**means tangible item that may be bought or sold and includes all marketable goods or wares;

(e) “**compostable plastics**” mean plastic that undergoes degradation by biological processes during composting to yield CO2, water, inorganic compounds and biomass at a rate consistent with other known compostable materials, excluding conventional petro-based plastics, and does not leave visible, distinguishable or toxic residue;-

(f) **“consent"**means the consent to establish and operate from the concerned Tamilnadu Pollution Control Board under the Water (Prevention and Control of Pollution) Act, 1974 (6 of 1974), and the Air (Prevention and Control of Pollution) Act, 1981 (14 of 1981);

(g) **“disintegration**” means the physical breakdown of a material into very small fragments;

(ga) **“Energy recovery”** means energy recovery from waste that is conversion of waste material into usable heat, electricity or fuel through a variety of processes including combustion, gasification, pyrolisation, anaerobic digestion and land fill gas recovery.

(h) **“extended producer’s responsibility”** means the responsibility of a producer for the environmentally sound management of the product until the end of its life;

(i) **“food-stuffs”** mean ready to eat food products, fast food, processed or cooked food in liquid, powder, solid or semi-solid form;

(j) **“facility”** means the premises used for collection, Storage, recycling, processing and disposal of plastic waste;

(k) **“importer”** means a person who imports or intends to import and holds an Importer - Exporter Code number, unless otherwise specifically exempted.

(l) **“institutional waste generator”** means and includes occupier of the institutional buildings such as building occupied by Central Government Departments, State Government Departments, public or private sector companies, hospitals, schools, colleges, universities or other places of education, organization, academy, hotels, restaurants, malls and shopping complexes;

(m) **“Manufacturer”** means and includes a person or unit or agency engaged in production of plastic raw material to be used as raw material by the producer.

(n) **“multilayered packaging”** means any material used or to be used for packaging and having at least one layer of plastic as the main ingredients in combination with one or more layers of materials such as paper, paper board, polymeric materials, metalized layers or aluminium foil, either in the form of a laminate or co-extruded structure

(o) **“plastic”** means material which contains as an essential ingredient a high polymer such as polyethylene terephthalate, high density polyethylene, Vinyl, low density polyethylene, polypropylene, polystyrene resins, multi-materials like acrylonitrile butadiene styrene, polyphenylene oxide, polycarbonate, Polybutylene terephthalate;

(p) **“plastic sheet”** means Plastic sheet is the sheet made of plastic;

(q) **“plastic waste”** means any plastic discarded after use or after their intended use is over;

(r) **“producer”** means persons engaged in manufacture or import of carry bags or multilayered packaging or plastic sheets or like, and includes industries or individuals using plastic sheets or like or covers made of plastic sheets or multilayered packaging for packaging or wrapping the commodity;

(s) **"recycling"** means the process of transforming segregated plastic waste into a new product or raw material for producing new products;

(t) **"registration”** means registration with the Tamilnadu Pollution Control Board

(u) **“street vendor”** shall have the same meaning as assigned to it in clause (l) of sub-section (1) of Section 2 of the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Act, 2014 (7 of 2014);

(v) **“local body”** means the Coimbatore City Municipal Corporation.

(w) **“virgin plastic”** means plastic material which has not been subjected to use earlier and has also not been blended with scrap or waste;

(x) **“waste generator”** means and includes every person or group of persons or institution, residential and commercial establishments including Indian Railways, Airport, Port and Harbour and Defense establishments which generate plastic waste;

(y) **“waste management”** means the collection, storage, transportation reduction, re-use, recovery, recycling, composting or disposal of plastic waste in an environmentally safe manner;

(z) **“waste pickers”** mean individuals or agencies, groups of individuals voluntarily engaged or authorized for picking of recyclable plastic waste.

**4.0** **Conditions: -** (1) The manufacture, importer stocking, distribution, sale and use of carry bags, plastic sheets or like, or cover made of plastic sheet and multilayered packaging, shall be subject to the following conditions, namely:-

a) carry bags and plastic packaging shall either be in natural shade which is without any added pigments or made using only those pigments and colourants which are in conformity with Indian Standard : IS 9833:1981 titled as “List of pigments and colourants for use in plastics in contact with foodstuffs, pharmaceuticals and drinking water”, as amended from time to time;

b) carry bags made of recycled plastic or products made of recycled plastic shall not be used for storing, carrying, dispensing or packaging ready to eat or drink food stuff’;

c) carry bag made of virgin or recycled plastic, shall not be less than fifty microns in thickness;

d) plastic sheet or like, which is not an integral part of multilayered packaging and cover made of plastic sheet used for packaging, wrapping the commodity shall not be less than fifty microns in thickness except where the thickness of such plastic sheets impair the functionality of the product;

e) the manufacturer shall not sell or provide or arrange plastic to be used as raw material to a producer, not having valid registration from the Tamilnadu Pollution Control Board.

f) sachets using plastic material shall not be used for storing, packing or selling gutkha, tobacco and pan masala;

g) recycling of plastic waste shall conform to the Indian Standard: IS 14534:1998 titled as Guidelines for Recycling of Plastics, as amended from time to time;

h) The provision of thickness shall not be applicable to carry bags made up of compostable plastic. Carry bags made from compostable plastics shall conform to the Indian Standard: IS 17088:2008 titled as Specifications for Compostable Plastics, as amended from time to time. The manufacturers or seller of compostable plastic carry bags shall obtain a certificate from the Central Pollution Control Board before marketing or selling; and

i) Plastic material, in any form including Vinyl Acetate - Maleic Acid - Vinyl Chloride Copolymer, shall not be used in any package for packaging gutkha, pan masala and tobacco in all forms.

**5.0 Responsibility of the local body:-** The Coimbatore City Municipal Corporation,

(1) Shall be responsible for development and setting up of infrastructure for segregation, collection, storage, transportation, processing, and disposal of the plastic waste either on its own or by engaging agencies or producers.

(2) Shall be responsible for setting up, operationalisation and co-ordination of the waste management system and for performing the associated functions, namely:-

a) Ensuring segregation, collection, storage, transportation, processing and disposal of plastic waste;

b) ensuring that no damage is caused to the environment during this process;

c) ensuring channelization of recyclable plastic waste fraction to recyclers;

d) ensuring processing and disposal on non-recyclable fraction of plastic waste in accordance with the guidelines issued by the Central Pollution Control Board;

e) creating awareness among all stakeholders about their responsibilities;

f) engaging civil societies or groups working with waste pickers; and

g) ensuring that open burning of plastic waste does not take place.

(3) The Commissioner, City Engineer, City Health Officer, Sanitary officer, Sanitary Inspector or any other officer authorised by the Commissioner will conduct surprise checks within the City limits at any time (day or night) with a view to encourage compliance.

**6.0 Responsibility of the waste generator:-**

(1) The waste generator shall:-

a) take steps to minimize generation of plastic waste and segregate plastic waste at source in accordance with the Solid Waste Management Rules, 2016 or as amended from time to time.

b) not litter the plastic waste and ensure segregated storage of waste at source and handover segregated waste to urban local body or agencies appointed by them or registered waste pickers', registered recyclers or waste collection agencies;

(2) All institutional generators of plastic waste, shall segregate and store the waste generated by them in accordance with the Solid Waste Management Rules, 2016 notified vide S.O. 1357(E) dated the 08th April, 2016 under the Act or amendment from time to time and handover segregated wastes to authorized waste processing or disposal facilities or deposition centers either on its own or through the authorized waste collection agency.

(3) All waste generators shall pay such user fee or charge as may be specified in the Coimbatore city municipal corporation solid waste management bylaw 2016 such as waste collection or operation of the facility thereof, etc.;

(4) Every person responsible for organising an event in open space, which involves service of foodstuff in plastic or multilayered packaging shall segregate and manage the waste generated during such events in accordance with the Solid Waste Management Rules, 2016 notified vide S.O. 1357(E) dated the 08th April, 2016 under the Act or amendment from time to time.

**7.0 Responsibility of producers, Importers and Brand Owners.-**

(1) The producers, within a period of six months from the date of publication of the Plastic Waste Management Rules 2016, shall work out modalities for waste collection system based on Extended Producers Responsibility and involvingHousing and Urban Development Departments, either individually or collectively, through their own distribution channel or through the Coimbatore city municipal corporation.

(2) Primary responsibility for collection of used multi-layered plastic sachet or pouches or packaging is of Producers, Importers and Brand Owners who introduce the products in the market. They need to establish a system for collecting back the plastic waste generated due to their products. This plan of collection to be submitted to the Tamilnadu Pollution Control Board while applying for Consent to Establish or Operate or Renewal. The Brand Owners whose consent has been renewed before the notification of the Plastic Waste Management Rules, 2016 shall submit such plan within one year from the date of notification of these rules and implement with two years thereafter.

(3) Manufacture and use of multi-layered plastic which is non-recyclable or non-energy recoverable or with no alternate use should be phased out in Two years time.

(4) The producer, within a period of three months from the date of final publication of the Plastic Waste Management Rules 2016, in the Official Gazette shall apply to the Tamilnadu Pollution Control Board, for grant of registration.

(5) No producer shall on and after the expiry of a period of Six Months from the date of final publication of the Plastic Waste Management Rules 2016, in the Official Gazette manufacture or use any plastic or multilayered packaging for packaging of commodities without registration from the Tamilnadu Pollution Control Board.

(6) Every producer shall maintain a record of details of the person engaged in supply of plastic used as raw material to manufacture carry bags or plastic sheet or like or cover made of plastic sheet or multilayered packaging.

**8.0 Responsibility of retailers and street vendors-**

(1) Retailers or street vendors shall not sell or provide commodities to consumer in carry bags or plastic sheet or multilayered packaging, which are not manufactured and labelled or marked, as per prescribed under the Plastic Waste Management Rules 2016.

**9.0** Every retailers or street vendors selling or providing commodities in plastic carry bags or multilayered packaging or plastic sheets or like or covers made of plastic sheets which are not manufactured or labelled or marked in accordance with the Plastic Waste Management Rules 2016, shall be liable to pay such fines as specified under the Coimbatore City Municipal Corporation Plastic Waste Management Bye-Laws, 2016.

**10.0 Penalties for contravention of these Bye-laws**

**(1)** On and from the date of commencement of these Bye-laws, there will be a familiarization/warning period of 30 days, after which, any contravention of these Bye-laws shall be punishable with fines as per the Schedule of Fines for every instance of breach of these byelaws.

**Schedule of Fines**

| Sl. No | Subject | Fine which may be imposed |
|---|---|---|
| 1 | The shop keeper and street vendors providing plastic carry bags for dispensing any commodities without registering with the Coimbatore city municipal corporation. | Rs. 10000/- |
| 2 | The Manufacturing, Stocking, Transporting, Sale and use of carry bags less than 50 micron thickness. | Rs. 10000/- |
| | Manufacturer / Whole seller / Stockist | Rs. 10000/- |
| | Retailer | Rs. 5000/- |
| | Shop keepers and street vendors | Rs. 2000/- |
| | Users / Public | Rs. 100/- |
| 3. . | Retailers, Street vendors and Commercial establishments selling or providing commodities to consumer in carry bags or Plastic sheets or Multilayered packaging **which are NOT MARKED AND LABELLED** as per norms prescribed in PWM Rules 2016. | Rs.5000/- |

Note: Any other type of violations not listed in sl.No. 1 to 3, the amount of fine for breach of bye-law and PWM Rule 2016 shall be decided by the Council subsequently based on the occurrence and necessity.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம். ந.க.எண். 9451/2018/ எம். இ.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 470 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண் 6

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கடந்த 04.04.2018 அன்று சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புதூர் மாநகராட்சி வார்டுகளிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்திரவிட்டார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் கோயம்புதூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 10, 22 மற்றும் 24 ஆகிய வார்டுகளிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களிலுள்ள காலி இடங்களில் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களைஅமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின் வருமாறு:

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில் ) |
|---|---|---|
| 1 | கோயம்புதூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 10 க்குட்பட்ட கே. எ. ராமசாமி வீதி பகுதியிலுள்ள காலி இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி(ந.க.எண் 11816/2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |
| 2 | கோயம்புதூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 22 க்குட்பட்ட பாரதி பார்க் பிரதான சாலை மற்றும் மேட்டுப்பாளையம் சாலை சந்திப்பில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண். 11817/2018/எம்.டி2) | ரூ.41,00,000/– |
| 3 | கோயம்புதூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 24 க்குட்பட்ட ஆரோக்கியசாமி சாலையில் அமைந்துள்ள இசைக் கல்லூரி வளாகத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண். 11818/2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |

மேற்காண் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை தற்சமயம் பொது நிதியின் கீழ் மேற்கொண்டு அவற்றிற்காகும் செலவினத்தொகையினை பின் நாளில் ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியின் கீழ் ஈடு செய்யவும், மேற்கூறிய பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 11816/2018/எம்.டி.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 471 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கடந்த 04.04.2018 அன்று சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டுகளிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்தரவிட்டார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின் பேரில் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள 45, 50, 52, 53, 54, 68, 72 மற்றும்74ஆகிய வார்டுகளிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களிலுள்ள காலி இடங்களில் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின் வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 45க்குட்பட்ட சங்கனூர் நாராயணசாமி வீதி மயானம் பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. (ந.க.எண்.11827 /2018/எம்.டி.5) | ரூ.69,00,000/- |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 50க்குட்பட்ட காந்திநகர் பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி . (ந.க.எண். 11828 /2018/எம்.டி.5) | ரூ.69,00,000/- |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 52க்குட்பட்ட சாஸ்திரி நகர் மயானம் (சத்தியமங்கலம் சாலைக்கு பின்புறம்) பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. (ந.க.எண். 11829 /2018/எம்.டி.5) | ரூ.69,00,000/- |
| 4 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 53க்குட்பட்ட சி.கே. காலனிபகுதியில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. (ந.க.எண். 11830 /2018/எம்.டி.5) | ரூ.48,60,000/- |
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 54க்குட்பட்ட செந்தமிழ் பூங்கா பகுதியில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. (ந.க.எண். 11831 /2018/எம்.டி.5) | ரூ.48,60,000/- |
| 6 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 68க்குட்பட்ட வள்ளியம்மாள் வீதி பகுதியில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. (ந.க.எண். 11832 /2018/எம்.டி.5) | ரூ.48,60,000/- |
| 7 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 72க்குட்பட்ட வ.உ.சி. பூங்கா வளாகத்தினுள5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. (ந.க.எண். 11834 /2018/எம்.டி.5) | ரூ.69,00,000/- |
| 8 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 72க்குட்பட்ட செல்லப்ப கவுண்டர் வீதிபகுதியில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. (ந.க.எண். 11833 /2018/எம்.டி.5) | ரூ.48,60,000/- |
| 9 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 74க்குட்பட்ட வீரப்பத் தேவர் காலனி பகுதியில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. (ந.க.எண். 11835 /2018/எம்.டி.5) | ரூ.48,60,000/- |

மேற்காண் பட்டியலில் குறிப்பிட்டுள்ள பணிகளை தற்சமயம் பொது நிதியின் கீழ் மேற்கொண்டு அவற்றிற்குண்டான செலவினத் தொகையினை பின் நாளில் ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியின் கீழ் ஈடு செய்யவும், மேற்கூறிய பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 11827 /2018/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 472 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

கடந்த 04.04.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டுகளிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் புதியதாக மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management ) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்திரவிட்டுள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் புதியதாக மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை நிறுவுதல் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.86 உக்கடம் பொன்விழா நகா் பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா் நிறுவுதல். (ந.க.எண். 11990/**2018**/எம்.டி.4) | 69.00 |
| 2. | கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.87க்குட்பட்ட சின்ன சுடுகாடு பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா் நிறுவுதல். (ந.க.எண். 11991/**2018**/ எம்.டி.4) | 69.00 |
| 3. | கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.91க்குட்பட்ட ஓம் சக்தி நகா் பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா் நிறுவுதல். (ந.க.எண். 11992/**2018**/ எம்.டி.4) | 69.00 |
| 4. | கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 93க்குட்பட்ட மின் நகா் பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா் நிறுவுதல். (ந.க.எண். 11993/**2018**/ எம்.டி.4) | 69.00 |
| 5. | கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 94க்குட்பட்ட செங்கப்பகோணாா் வீதியில் உள்ள ரிசா்வ் சைட்டில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா் நிறுவுதல். (ந.க.எண். 11994/**2018**/எம்.டி.4) | 41.00 |
| 6. | கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 95க்குட்பட்ட சத்திரம் வீதியில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா் நிறுவுதல். (ந.க.எண். 11995/**2018**/எம்.டி.4) | 41.00 |
| 7. | கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 97க்குட்பட்ட ஆழியாா் நீா்தேக்கத் தொட்டியின் பின்புறம் பேஸ்1 பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா் நிறுவுதல். (ந.க.எண். 11996/**2018**/எம்.டி.4) | 69.00 |
| 8. | கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 98க்குட்பட்ட இளங்கோ நகா் பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா் நிறுவுதல். (ந.க.எண். 11997/**2018**/ எம்.டி.4) | 69.00 |
| 9. | கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 100க்குட்பட்ட தருண் ரெசிடென்சி 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா் நிறுவுதல். (ந.க.எண். 11998/**2018**/ எம்.டி.4) | 69.00 |

எனவே மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் புதியதாக மைக்ரோ கம்போஸ்டிங் சென்டா்களை நிறுவுதல் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் நிா்வாக அனுமதி வேண்டி பொருள் சமா்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண். 11990/**2018**/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 473 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கடந்த 04.04.2018 அன்று சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டுகளிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்திரவிட்டார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 5, 13, 14, 15, 16, 17, 18, 19, 21 மற்றும் 22 ஆகிய வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின் வருமாறு:

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில் ) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 5 க்குட்பட்ட முல்லை நகர் பகுதியிலுள்ள பழைய குப்பை கொட்டும் இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண். 11614/2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 15 க்குட்பட்ட மருதமலை பிரதான சாலை ஜீவா நகர் பகுதியிலுள்ள சுண்ணாம்பு காலவாய் அமைந்துள்ள இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11615/2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 16 க்குட்பட்ட வி.என்.ஆர். நகர் பகுதியில் அமைந்துள்ள மயான வளாகத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண். 11616/2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |
| 4 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 17 க்குட்பட்ட பாலாஜி நகர் பகுதியில் அமைந்துள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண். 11617 /2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 18 க்குட்பட்ட சுண்டப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள மயான வளாகத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண். 11618/2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |
| 6 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 21 க்குட்பட்ட பனைமரத்தூர் பகுதியில் அமைந்துள்ள மயான வளாகத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11619/2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |
| 7 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 13 க்குட்பட்ட வெங்கிட்டாபுரம் பகுதியில் அமைந்துள்ள மயான வளாகத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11620/2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |
| 8 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 14 க்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில் அமைந்துள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11621/2018/எம்.டி2) | ரூ.41,00,000/– |
| 9 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 19 க்குட்பட்ட வீரகேரளம் பகுதியில் அமைந்துள்ள மயான வளாகத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11622/2018/எம்.டி2) | ரூ.69,00,000/– |
| 10 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 22 க்குட்பட்ட முருகன் மில் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11623/2018/எம்.டி2) | ரூ.41,00,000/– |

மேற்காண் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை தற்சமயம் பொது நிதியின் கீழ் மேற்கொண்டு பின் நாளில் ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியின் கீழ் பணிகளை மேற் கொள்ளவும், மேற்கூறிய பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11614/ 2018 / எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 474 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கடந்த 04.04.2018 அன்று சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டுகளிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்திரவிட்டார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 1,3,26,30,31,40,41 மற்றும் 55 ஆகிய வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின் வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 1–க்குட்பட்ட துடியலூர் தினசரி மார்க்கெட் வளாகத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 12181 /2018/எம்.டி.2) | 69.00 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 3–க்குட்பட்ட வளர்மதி நகரில் மாநகராட்சிக்கு செந்தமான இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான ஆன் மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 12180/2018/எம்.டி.2) | 69.00 |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 26 –க்குட்பட்ட வாட்டர் டேங்க் அருகில் அமைந்துள்ள வெள்ளக்கிணர் ஹசிங்யூனிட் பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண்.12179 /2018/எம்.டி.2) | 69.00 |
| 4 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 30 –க்குட்பட்ட சரவணம்பட்டி விளாங்குறிச்சி ரோடு MSR டேங்க் பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 12172/2018/எம்.டி.2) | 69.00 |
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 31 –க்குட்பட்ட பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 12171/2018/எம்.டி.2) | 69.00 |
| 6 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 38 –க்குட்பட்ட பீளமேடு விளாங்குறிச்சி ரோட்டில் அமைந்துள்ள பழைய மின் மயான வளாகத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண்.12178/2018/எம்.டி.2) | 69.00 |
| 7 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 40 –க்குட்பட்ட ஆவாரம்பாளையம் வி.ஜி ராவ் நகரில் மாநகராட்சிக்கு செந்தமான இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண்.12177/2018/எம்.டி.2) | 69.00 |
| 8 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 41 –க்குட்பட்ட ராமகிருஷ்ணாபுரம் MSR டேங்க் அருகில் அமைந்துள்ள சிறுவாணி கார்டனில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 12176/2018/எம்.டி.2) | 69.00 |
| 9 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 41 –க்குட்பட்ட காந்தி மாநகர் பகுதியில் அமைந்துள்ள மைதானத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 12175/2018/எம்.டி.2) | 69.00 |
| 10 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 42 –க்குட்பட்ட சின்னவேடம்பட்டி அத்திப்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள பழைய குப்பை கிடங்கு வளாகத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 12174/2018/எம்.டி.2) | 69.00 |

| | | |
|---|---|---|
| 11 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55 –க்குட்பட்ட செங்காடு பழைய வண்டிப்பேட்டை மைதானத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 12173 /2018/எம்.டி.2) | 69.00 |

மேற்காண் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை தற்சமயம் பொது நிதியின் கீழ் மேற்கொண்டு பின் நாளில் ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியின் கீழ் பணிகளை மேற் கொள்ளவும், மேற்கூறிய பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் **ந.க.எண். 12181/2018/எம்.டி.2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 475 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கடந்த **04.04.2018** அன்று சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டுகளிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்திரவிட்டார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள **33,56,57,58,59,63** மற்றும் **66** ஆகிய வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில் ) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண். 33 க்குட்பட்ட வையாபுரி நகர் (காளப்பட்டி) பகுதியிலுள்ள பழைய குப்பை கொட்டும் இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11886/2018/எம்.டி3) | ரூ.69,00,000/– |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண். 56 க்குட்பட்ட ஹட்கோ காலனி பகுதியிலுள்ள பழைய குப்பை கொட்டும் இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11887/2018/எம்.டி3) | ரூ.69,00,000/– |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண். 57 க்குட்பட்ட ஜி. வி ரெசடென்சி பகுதியில் பழைய குப்பை கொட்டும் இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11888 /2018/எம்.டி3) | ரூ.69,00,000/– |
| 4 | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண். 58 க்குட்பட்ட இராமானுஜம் நகர் பகுதியில் பழைய குப்பை கொட்டும் இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11889 /2018/எம்.டி3) | ரூ.69,00,000/– |
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண். 59 க்குட்பட்ட திருவள்ளுவர் நகர் பகுதியில் பழைய குப்பை கொட்டும் இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11890/2018/எம்.டி3) | ரூ.69,00,000/– |
| 6 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 63 க்குட்பட்ட சிங்காநல்லூர் குளம் அருகில் பழைய குப்பை கொட்டும் இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண். 11891 /2018/எம்.டி3) | ரூ.69,00,000/– |

| | | |
|---|---|---|
| 7 | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் வார்டு எண். 66 க்குட்பட்ட ராஜிவ் காந்தி நகர் பகுதியில் பழைய குப்பை கொட்டும் இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி (ந.க.எண்.11892 /2018/எம்.டி.3) | ரூ.69,00,000/– |

மேற்காண் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை தற்சமயம் பொது நிதியின் கீழ் மேற்கொண்டு பின் நாளில் ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ளவும், மேற்கூறிய பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.11886 /2018/எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 476 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

கடந்த 04.04.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புதூர் மாநகராட்சி வார்டுகளிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் புதியதாக மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்திரவிட்டதுடன் மண்டலத்திற்கு ஒரு மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் மற்றும் அம்ரூட், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் பூங்காக்களில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர்களை அமைக்கவும் உத்திரவிட்டார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் புதியதாக மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்கள் மற்றும் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர்களை நிறுவுதல் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களது நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 03.08.2018 மற்றும் 20.09.2018 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 36 பிருந்தாவன் நகர் பகுதியில் உள்ள 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 7000 / 2018 / ஜே. என்.5) | ரூ. 66,44,928/– | 1. திரு/ள். க்ளின் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 72,93,801/– | மதிப்பீட்டு தொகைக்கு 9.76% அதிகம் |
| | | | 2. திரு/ள். டாய்லெட் ஃபர்ஸ்ட், கோயம்புத்தூர். | ரூ.70,85,817/– | மதிப்பீட்டு தொகைக்கு 6.63 % அதிகம் |
| | | | | ரூ. 69,74,780 /– (விலை குறைப்பிற்கு பின்னர்) | விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கு 4.96 % அதிகம் |
| 2 | வார்டு எண். 4 அப்பநாயக்கன் பாளையம் பகுதியில் (ஃப்ரியல் க்ரவுண்ட் வளாகத்தில்) 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 9156 / 2018 / ஜே. என்.5) | ரூ. 66,44,928/– | 1. திரு/ள். க்ளின் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 86,83,795/– | மதிப்பீட்டு தொகைக்கு 30.68 % அதிகம் |
| | | | 2. திரு/ள். டாய்லெட் ஃபர்ஸ்ட், கோயம்புத்தூர். | ரூ. 70,85,817/– | மதிப்பீட்டு தொகைக்கு 6.63 % அதிகம் |
| | | | | ரூ. 69,76,023 /– (விலை குறைப்பிற்கு பின்னர்) | விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கு 4.98 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | வார்டு எண். 17 ஒனப்பாளையம் பகுதியில் (ஃபீரியல் க்ரவுண்ட் பக்கத்தில்) 2 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 9286 / 2018 / ஜே. என்.5) | ரூ. 39,13,904/– | 1. தி/ள். க்ளின் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 43,79,122/– | மதிப்பீட்டு தொகைக்கு 11.89 % அதிகம் |
| | | | 2. தி/ள். டாப்லெட் ஃப்ர்ஸ்ட், கோயம்புத்தூர். | ரூ. 42,98,624/– | மதிப்பீட்டு தொகைக்கு 9.83 % அதிகம் |
| | | | | ரூ. 41,07,688 /– (விலை குறைப்பிற்கு பின்னர்) | விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கு 4.95 % அதிகம் |
| 4 | வார்டு எண். 74 சிவராம் நகர் (சௌத் என்கிளாவ்) பகுதியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் அமைக்கப்பட்ட பூங்கா வளாகத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 7801 / 2018 / ஜே. என்.5) | ரூ. 6,63,443/– | 1. திருமதி. டி,ரோஸி கோயம்புத்தூர். | ரூ. 7,06,272/– | மதிப்பீட்டு தொகைக்கு 6.46 % அதிகம் |
| | | | 2. தி/ள். பாட் எண்டர்பிரைசஸ்கோயம்புத்தூர். | ரூ. 7,03,315/– | மதிப்பீட்டு தொகைக்கு 6.01% அதிகம் |
| | | | | ரூ.6,96,371/– (விலை குறைப்பிற்கு பின்னர்) | விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கு 4.96% அதிகம் |
| 5 | வார்டு எண். 18 டவுட்டா நகர் பகுதியில் அம்ருட் திட்டத்தில் அமைக்கப்பட்ட பூங்கா வளாகத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 7802 / 2018 / ஜே. என்.5) | ரூ. 6,63,443/–/– | 1. தி/ள். ஆர் எஸ் பி இன்ப்ரா பி. லிட்., கோயம்புத்தூர். | ரூ. 6,69,152/– | மதிப்பீட்டு தொகைக்கு 0.86 % அதிகம் |
| | | | 2. தி/ள். ஆர் வி ஜி மெட்டல் இன்டஸ்ட்ரீ, கோயம்புத்தூர். | ரூ. 6,60,561/– | மதிப்பீட்டு தொகைக்கு (-) 0.43% குறைவு |
| | | | | ரூ. 6,60,561/– (விலை குறைப்பிற்கு பின்னர்) | விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கு (-) 0.43% குறைவு |
| 6 | வார்டு எண். 74 ஸ்ரீநாத் லேக் வியூ பகுதியில் அம்ருட் திட்டத்தில் அமைக்கப்பட்ட பூங்கா வளாகத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 7803 / 2018 / ஜே. என்.5) | ரூ. 6,63,443/– | 1. திருமதி. டி,ரோஸி கோயம்புத்தூர். | ரூ. 7,06,272/– | மதிப்பீட்டு தொகைக்கு 6.46 % அதிகம் |
| | | | 2. தி/ள். பாட் எண்டர்பிரைசஸ்கோயம்புத்தூர். | ரூ. 7,03,315/– | மதிப்பீட்டு தொகைக்கு 6.01% அதிகம் |
| | | | | ரூ.6,96,371/– (விலை குறைப்பிற்கு பின்னர்) | விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கு 4.96% அதிகம் |
| 7 | வார்டு எண். 74 சிவராம் நகர் (வெஸ்ட் எக்ஸ்டென்ஷன்) பகுதியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் அமைக்கப்பட்ட பூங்கா வளாகத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 7806 / 2018 / ஜே. என்.5) | ரூ. 6,63,443/– | 1. திருமதி. டி,ரோஸி கோயம்புத்தூர். | ரூ. 7,06,272/– | மதிப்பீட்டு தொகைக்கு 6.46 % அதிகம் |
| | | | 2. தி/ள். பாட் எண்டர்பிரைசஸ்கோயம்புத்தூர். | ரூ. 7,03,315/– | மதிப்பீட்டு தொகைக்கு 6.01% அதிகம் |
| | | | | ரூ.6,96,371/– (விலை குறைப்பிற்கு பின்னர்) | விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கு 4.96% அதிகம் |

விலைகுறைப்பிற்குப் பின்னர் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்திருந்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் ந.க.எண்.7000 / 18 / ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 477 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வரியில்லா இனம் - வார்டு எண்.72 அவினாசி சாலையிலுள்ள மாநகராட்சி வணிக வளாகம் - கடை எண்.5 மற்றும் 10 பிரஸ் கிளப் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. – பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை உயர்வு செய்து – நிலுவைத் தொகையினை தள்ளுபடி செய்து இலவசமாக ஒதுக்கீடு செய்து தர கோருவது – தொடர்பாக.

பார்வை
1) மாமன்ற தீர்மான எண்.184 நாள்.16.05.2012
2) மாமன்ற தீர்மான எண்.317 நாள்.30.04.2013
3) கோயம்புத்தூர் பிரஸ்கிளப் நிர்வாகிகளுடன் நடத்தப்பட்ட கலந்தாய்வு கூட்டம் நாள்.04.05.2018.
4) தலைவர், கோயம்புத்தூர் பிரஸ்கிளப் அவர்களின் கடித நாள்.30.05.2018.
5) ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.10.07.2018.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் வார்டு எண்.72 மாநகராட்சி வணிக வளாகத்தில் கோயம்புத்தூர் பிரஸ் கிளப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை எண்.5 மற்றும் கடை எண்.10-க்கு பார்வை (1) மற்றும் (2)-ன்படி பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் 01.09.2012-ன்படி கடை எண்.5-க்கு மாத வாடகை ரூ.661/-லிருந்து ரூ.15,203/- ஆகவும் மற்றும் கடை எண்.10-க்கு மாத வாடகை ரூ.661/-லிருந்து ரூ.15,003/- ஆகவும் உயர்வு செய்யப்பட்டது. மேற்படி கடை உரிமதாரர்கள் கடை வாடகை உயர்வு செய்ததிலிருந்து வாடகைத் தொகை செலுத்துவதில்லை. கடை எண்.5 மற்றும் 10-க்கு அக் அக்டோபர் 2012 முதல் ஊப்ரல் 2018 முடிய ரூ.30,56,745/- நிலுவையில் உள்ளது. பல முறை நோட்டீஸ் சார்வு செய்தும், நேரில் தெரிவித்தும் நிலுவைத் தொகை செலுத்தப்படவில்லை.

பார்வை (3)-ல் ‘‘கோயம்புத்தூர் பிரஸ் கிளப்’’ நிர்வாகிகள், திரு.எஸ்.செந்தில் குமார், தலைவர் மற்றும் திரு.எ.ஆர்.பாபு, பொருளாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலருடன் 04.05.2018 மாலை 4.30 மணிக்கு உதவி ஆணையாளர் (ம) முன்னிலையில் கடை வாடகை தொடர்பாக கலந்து பேசியதில், கடை வாடகை உயர்வு தொடர்பாக பிரஸ் கிளப் நிர்வாகிகளுடன் விரிவாக ஆலோசித்து, ஒரு வாரக் காலத்திற்குள் எழுத்து மூலமாக பதில் தருவதாக தெரிவித்தனர்.

பார்வை (4)-ல் காணும் கடிதத்தில், மேற்படி கடைகளுக்கு வாடகையை பன்மடங்கு உயர்த்தியுள்ளது என்றும், எவ்வித லாபநோக்கமும் இல்லாமல், ஊடகத்துறையின் மேம்பாட்டிற்காக செயல்பட்டுவரும் தங்களால் உயர்த்தப்பட்டு நிர்ணயம் செய்த வாடகையினை செலுத்த இயலாத நிலை உள்ளது எனவும் கடை எண்.5-க்கு பழைய மாதவாடகை ரூ.661,-ம் மற்றும் கடை எண்.10-க்கு பழைய மாத வாடகை ரூ.661,- கணக்கிட்டு அதற்கான நிலுவைத் தொகையினை பாக்கியில்லாமல் செலுத்தி விட்டு கடையினை காலிசெய்து ஒப்படைப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

(அ) மாநகராட்சிக்கு தொடர் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு பழைய வாடகை நிலுவைத் தொகையினை வட்டியுடன் வசூல் செய்யவும்,

(இ) ‘‘கோயம்புத்தூர் பிரஸ் கிளப்’’ நிறுவனத்தினர் மாநகராட்சிக்கு 2 கடைகளை ஒப்படைத்தப்பின் அவைகளை மறு ஏலத்திற்கு கொண்டு வருவதற்கும், மேலும் (ஆ) லாப நோக்கம் இல்லாமல் ஊடகத் துறையினரின் மேம்பாட்டிற்காக கடைகளை உபயோகித்து வருவதாகத் தெரிவித்துள்ளதால் 01.09.2012 முதல் மாநகராட்சியால் உயர்த்தப்பட்ட வாடகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க கோரும் ‘‘கோயம்புத்தூர் பிரஸ் கிளப்’’ -யின் கோரிக்கை தொடர்பாக முடிவு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு கருத்துரு பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 5232 /18/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 478 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.81 மற்றும் 84 - மாநகராட்சி திருமண மண்டபம் மற்றும் சமுதாய கூடம் - பொதுமக்களுக்கு திருமண நிகழ்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் வைபங்களுக்கு - வாடகை மற்றும் வைப்புத்தொகை நிர்ணயம் செய்யப்படுதல் - தொடர்பாக.

பார்வை :- 1.உதவி பொறியாளர், வார்டு எண். 81 மற்றும் 84 மத்திய மண்டலம் அவர்களின் அறிக்கை நாள்.10.02.2018.
2. உதவி பொறியாளர், வார்டு எண். 81 மற்றும் 84 மத்திய மண்டலம் அவர்களின் அறிக்கை நாள்.06.03.2018.
3. இதே எண்ணிட்ட ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் முன்அனுமதி நாள்.20.04.2018.

_*_*_*_*_

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட வார்டு எண். 81 மற்றும் 84 -இல் உள்ள சமுதாய கூடம் மற்றும் திருமண மண்டபத்திற்கு கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுடன் வாடகை மற்றும் வைப்புத்தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) ஒரு நாள் நிகழ்ச்சி என்பது - முதல் நாள் மாலை 4.00 மணி முதல் அடுத்த நாள் மாலை 4.00 மணி வரை ஆகும்.
2) நிகழ்ச்சி தேதிக்கு 90 நாட்களுக்கு முன் பதிவு செய்து கட்டணம் செலுத்தப்பட்ட அனைத்து கணிணி ரசீது நகல் மற்றும் முகவரி சான்று நகலுடன் உரிய படிவத்தில் விண்ணப்பித்தால் திருமண மண்டபம் / சமுதாய கூடத்தில் நிகழ்ச்சி நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்படும்.
3) மேற்படி கட்டிடத்தில் எந்தவித அரசியல் கூட்டம் மற்றும் அரசியல் சம்மந்தப்பட்ட உரையும் நிகழ்த்த கூடாது.
4) கட்டிடத்தின் வெளிப்புறம் மற்றும் அதன் சுற்றுச்சுவர்களுக்குள் எந்தவிதமான அரசியல் கொடிகளையும் பறக்கவிடக்கூடாது.
5) வெளியேயுள்ள பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் ஒலிபெருக்கி உபயோகிக்க கூடாது. கட்டிடத்திற்குள்ளும் ஒலிபெருக்கி அனுமதிக்க காவல் துறையின் அனுமதியை பெறவேண்டியது மனுதாரரின் பொறுப்பாகும்.
6) கட்டிடத்தை உபயோகிப்பது சம்பந்தமாக மாநகராட்சி ஆணையாளரால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்திரவுகளுக்கும் அறிவுரைகளுக்கும் கட்டுப்படவேண்டும்.
7) எந்தவித முன்னறிவிப்புமின்றி எந்த நேரத்திலும் உத்திரவை ரத்து செய்வதற்கு மாநகராட்சி ஆணையாளருக்கு உரிமை உண்டு.
8) திருமண மண்டபம் / சமுதாய கூடம் ஒதுக்கீடு செய்தபின் தேவையில்லாத பட்சத்தில், விண்ணப்பதாரர் நிகழ்ச்சி தேதிக்கு 30 நாட்களுக்கு முன்பே விண்ணப்பம் செய்தல் வேண்டும்.
9) நிகழ்ச்சி நாளில் வேறொருவருக்கு ஒதுக்கீடு செய்தாலேயன்றி தொகை திருப்பித்தர இயலாது. அவ்வாறு வழங்கும் போது நிருவாக செலவு நீங்கலாக 75 சதவீதம் மட்டுமே திருப்பி வழங்கப்படும். (மாநகர மன்ற தீர்மான எண்.386 நாள்.20.07.1992)
10) திருமண மண்டபம் / சமுதாய கூடம் காவலர் மூலம் மின் கட்டணம் யூனிட்டுக்கு ரூ.9/- வீதம் கணக்கிட்ட கட்டணம் மற்றும் சுத்தம் செய்யப்பட்ட கட்டணம் ஆகியவற்றை மத்திய மண்டல கருவூலத்தில் செலுத்த வேண்டும்.
11) மின் விளக்குகள் மேலும் அதிகரிக்க மின்சார இலாகாவிற்கு விண்ணப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். (மாநகர மன்ற தீர்மான எண்.467 நாள்.18.07.1987)
12) திருமண மண்டபம் / சமுதாய கூடம் பயன்படுத்துகையில் ஏதாவது சேதாரம் ஏற்படுத்தினால் வைப்பு தொகையில் பிடித்தம் செய்யப்படும்.
13) கோயம்புத்தூர் மாநகராட்சி பணியாளர்கள் அவர்களின் தலைமை அலுவலரின் பரிந்துரை செய்யப்பட்ட கடிதம், பணியாளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை நகலுடன் விண்ணப்பம் செய்தால் வாடகையில் மட்டும் 50 சதவீதம் சலுகை கட்டணமாக செலுத்த அனுமதி அளிக்கப்படும்.
14) நிகழ்ச்சி முடிவடைந்தபின் வைப்புத்தொகை செலுத்தப்பட்ட கணிணி ரசிது அசல் மற்றும் விண்ணப்பதாரர் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகலுடன் விண்ணப்பம் செய்தால், இளம்/உதவி பொறியாளர் அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படும்.

பட்டியல் 1.

| வரிசை எண் | வார்டு எண் | திருமண மண்டபம் மற்றும் சமுதாய கூடம் அமைந்துள்ள இடம் | | தற்போது வசூல் செய்யும் வாடகை ரூ. | தற்போது வசூல் செய்யும் வைப்புத் தொகை ரூ. | பதிவு அலுவலக நில மதிப்பீட்டின் படியும், பொதுப் பணித்துறை கட்டிட மதிப்பீட்டின் படியும் பரிந்துரைக்கப்பட்ட தினவாடகை ரூ. | வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 81 | சூரியன் வீதி, வி.எச்.சாலை | சமுதாய கூடம் | 240 | 2000 | 540 | 5000 |
| 2 | 84 | தர்மராஜா கோவில் வீதி | திருமண மண்டபம் | 4000 | 5000 | 5200 | 10000 |

பட்டியல் 2.

| வரிசை எண் | வார்டு எண் | சமுதாய கூடம் அமைந்துள்ள இடம் | | தற்போது வசூல் செய்யும் வாடகை ரூ. | தற்போது வசூல் செய்யும் வைப்புத் தொகை ரூ. | கூடுதலாக 15% நிர்ணயம் செய்ய பரிந்துரைக்கப்பட்ட தினவாடகை ரூ. | வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 84 | சி.எம்.சி.காலனி, உக்கடம். | சமுதாய கூடம் | 1000 | 5000 | 1200 | 5000 |
| 2 | 84 | எல்.ஜி. தோட்டம், கெம்பட்டி காலனி 7-வது வீதி, | சமுதாய கூடம் | 2500 | 5000 | 3000 | 5000 |

எனவே மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் பட்டியல் எண் 1 மற்றும் 2 -இல் கண்டுள்ளவாறு திருமண மண்டபம் / சமுதாய கூடத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெறும் நாள் முதல் வாடகை மற்றும் வைப்புத் தொகை நிர்ணயம் செய்து மத்திய மாநில அரசு துறைகளான வருமானவரித்துறை, கலால்வரித்துறை மற்றும் இதர அரசு துறைகளால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்திரவுகளின்படி சேவை வரி, இதர வரிகள், மின்சார செலவினங்கள் மற்றும் நிகழ்ச்சி முடிவுற்ற பின் சுத்தம் செய்வதற்கான கட்டணம் ஆகியவற்றை செலுத்தப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகளுடன் பொது மக்களுக்கு பதிவு செய்யவும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண்.343/2017/அ5(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 479 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்:36 உட்பட்ட விமான நிலைய அணுகுசாலையின் மேற்குபுறம் பூங்கா நகர் மற்றும் பிருந்தாவன் நகர் சாலை பகுதியில் தெரு விளக்குகள் இல்லாததால் இப்பகுதியில் தெருவிளக்கு அமைத்து தருமாறு கோவை விமான நிலைய ஆணையாளர் அவர்கள் கோவை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு 12-11-2018 அன்று கடிதம் அனுப்பி உள்ளார். மேலும் கடந்த 22-11-2018 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் மேற்படி சாலையில் தெரு விளக்குகள் அமைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் விமான நிலைய ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார். அதன்படி மாவட்ட ஆட்சியர் அவர்களும் தெருவிளக்குகள் அமைத்து தருமாறு உத்திரவிட்டார்.அதன்பேரில்,மேற்படி இடத்தை ஆய்வு செய்ததில் தெரு விளக்ககுகள் இல்லாத விமான நிலைய சுற்றுசுவர் ஒட்டிய பூங்கா நகர் மற்றும் பிருந்தாவன் நகர் சாலை பகுதிகளில் மட்டும் கம்பத்துடன் கூடிய 23 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் அமைக்க வேண்டியுள்ளது.இதற்கான மதீப்பீடு ரூ17.30 லட்சத்திற்கு தயாரிக்கபட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்11293/2018/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 480 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

பொருள்: உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி- வார்டு எண் 67 – மாநகராட்சி மருதூர் கல்யாண மண்டபம் - 2018-2021 மூன்றாண்டு குத்தகைக்கு ஒப்படைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி 25.10.2018-அன்று கோரப்பட்டது – உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி ஆணையாளர் முன் அனுமதி பெற்று ஒப்படைக்கப்பட்டது – மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டுதல் - தொடர்பாக

பார்வை:
1. மாமன்ற தீர்மான எண். 46, நாள். 12.03.2018.
2. ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலம் நாள். 06.03.2018 , 20.03.2018 , 20.04.2018, 25.07.2018 மற்றும் 25.10.2018.
3. ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி நாள். 30.10.2018.

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் மாநகராட்சி மருதூர் கல்யாண மண்டபம் குத்தகை இனத்தை 2018-2021 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க 25.10.2018 அன்று 5-வது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட சுய உதவிக்குழுக்கள் கலந்து கொண்ட ஒபப்ந்தப்புள்ளியை பதிவு செய்துள்ளனர்.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் | மின்ஏல விபரம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கிருஷ்ணா மகளிர் சுயஉதவிக்குழு, சிங்காநல்லூர் | 3,55,505 | 3,55,000 |
| 2. | மகரஜோதி மகளிர் சுயஉதவிக்குழு, சிங்காநல்லூர் | 3,54,500 | - |
| 3. | ரிதம் மகளிர் சுய உதவிக்குழு | - | - |

இவற்றில் 25.07.2018 –ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண் 2-ல் கண்டுள்ள சிங்காநல்லூர் மகரஜோதி மகளிர் சுயஉதவிக்குழு, இனத்திற்கு குத்தகை தொகை ரூ.3,22,223/- ஒப்பந்தப்புள்ளி பதிவு செய்திருந்தனர். மேற்படி குத்தகை இனத்தை மீண்டும் மறு ஏலம் கோர இராமநாதபுரம் ரிதம் மகளிர் சுய உதவிக்குழு மகரஜோதி மகளிர் சுயஉதவிக்குழு பதிவு செய்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3,22,223/- ஐ விட 10% கூடுதலாக தொகை ரூ. 3,54,445/- ற்கு செலுத்துவதாக தெரிவித்து ரூ.3,22,223/-க்கு வரைவோலையுடன் மறு ஏலம் கொண்டு வர 26.07.2018-ம் தேதிய கடிதத்தில் கோரியிருந்தார். அதன்படி மேற்படி இனத்தை 25.10.2018-ம் தேதியன்று மீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏலம் கோரப்பட்டதில் வரிசை எண் 1-ல் கண்டுள்ள ஸ்ரீ கிருஷ்ணா மகளிர் சுயஉதவிக்குழுவினர் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 3,55,505/-க்கு உச்சக் கேள்வி பதிவு செய்துள்ளனர். இது 2017-18 –ம் ஆண்டு உரிமத் தொகை ரூ. 84,892/-ஐ விடவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 80914/-ஐ விடவும், மாநகராட்சி மதிப்பு தொகை ரூ. 3,54,445/- ஐ விடவும் கூடுதலாக உள்ளது.

எனவே மாநகராட்சி தொடர் இழப்பை தவிர்க்கும் பொருட்டும், அவசர அவசியம் கருதி ஸ்ரீ கிருஷ்ணாமகளிர் சுயஉதவிக்குழுவின் உச்சக் கேள்வித்தொகை ரூ. 3,55,505/- ஏற்று ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று 01.11.2018 முதல் ஒப்படைத்தமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பின்னேற்பு வழங்கலாம் ந.க.எண்.8749 /2018/அ11 (கி)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 481 நாள் 13.12.2018</u>**

பின்னேற்பு வழங்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் - 59 க்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 59 | வார்டு எண் 59-க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறு ஆழப்படுத்துதல் மற்றும் பழுதடைந்த பேனல் போர்டுகள் மாற்றுதல் பணி ந.க.எண் 11290/ 2018/எம்.டி.3 | 5.00 |
| 2 | 59 | வார்டு எண் 59-க்குட்பட்ட வசந்தா மில் மெயின் ரோடு மற்றும் வார்டு பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்று நீர் குழாய் அமைத்தல் பணி ந.க.எண் 11292/ 2018/எம்.டி.3 | 5.00 |
| | | மொத்தம் | 10.00 |

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 11290/ 2018/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 482 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

பொருள் : உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - வார்டு எண் 57-மசக்காளிபாளையம் பகுதியில் மாநகராட்சி புதிய வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடைகள் எண் 1,2, 5,9,10 மற்றும் 11 ஆகியவைகளுக்கு மறு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – ஆணையாளர் முன்அனுமதி பெற்று ஒப்படைத்தது – மன்றத்தின் பின்னேற்பு வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்92. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 30.07.2007.
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். 27.03.2018.
3. மறு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நாள்.25.10.2018.
4. ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி நாள்.30.10.2018.

------------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 57-ல் உள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் 11 கடைகள் கட்டப்பட்டு 2013-14-ல் 5 முறையும், 2014-15-ல் 8 முறையும், 2015-16-ல் 6முறையும், 2016-17-ல் 6 முறையும், 2017-18-ல் 9 முறையும் மற்றும் 2018-19-ம் ஆண்டு 3 முறையும் ஆக மொத்தம் 37 முறை ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலம் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் பார்வை (3)-ல் கண்டுள்ளவாறு 37-வது முறையாக காலியாக உள்ள 1,2,5,9,10 மற்றும் 11 ஆகிய 6 கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவற்றில் கீழ்க்கண்டுள்ளவாறு ஏலதாரர்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி பதிவு செய்துள்ளனர்.

1. <u>மசக்காளிபாளையம் கடை எண் 1</u>

| வரிசை எண் | ஏலதாரர் பெயர் | கடையின் அளவு சதுரடியில் | மாநகராட்சி மதிப்பு ரூபாயில் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|
| 1. | திரு. கே.எ. காஜா உசைன் | 184.84 | 8000 | 8470 |
| 2. | திரு. வெள்ளிங்கிரி | | | 7200 |

மேற்காணும் கடைக்கு மாநகராட்சி மதிப்பு சதுரடிக்கு ரூ.42/- என நிர்ணயம் செய்யப்பட்டு மாநகராட்சி மதிப்பாக மாதாந்திர உரிமத்தொகை ரூ. 8000/என நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. குத்தகைதாரர் கோரியுள்ள கடையின் அளவு 184.84 சதுரடி ஆகும். குத்தகைதாரர் திரு. கே.எ. காஜா உசைன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில மாதாந்திர உரிமத்தொகை ரூ. 8470/-க்கு பதிவு செய்துள்ளார். இது மாநகராட்சி மதிப்பு ரூ. 8000/-ஐ விட ரூ. 470/- கூடுதலாக உள்ளது.

2. <u>மசக்காளிபாளையம் கடை எண் 5</u>

| வரிசை எண் | ஏலதாரர் பெயர் | கடையின் அளவு சதுரடியில் | மாநகராட்சி மதிப்பு ரூபாயில் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|
| 1. | திரு. பி. கார்த்திகேயன் | 184.84 | 8000 | 8500 |

மேற்காணும் கடைக்கு மாநகராட்சி மதிப்பு சதுரடிக்கு ரூ.42/- என நிர்ணயம் செய்யப்பட்டு மாநகராட்சி மதிப்பாக மாதாந்திர உரிமத்தொகை ரூ. 8000/என நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. குத்தகைதாரர் கோரியுள்ள கடையின் அளவு 184.84 சதுரடி ஆகும். மேற்படி கடைக்கு ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு உச்சக் கேள்வித் தொகை பதிவு செய்துள்ளார். குத்தகைதாரர் திரு. பி. கார்த்திகேயன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் மாதாந்திர உரிமத்தொகை ரூ. 8500/-க்கு பதிவு செய்துள்ளார். இது மாநகராட்சி மதிப்பு ரூ. 8000/-ஐ விட ரூ. 500/- கூடுதலாக உள்ளது.

3. மசக்காளிபாளையம் கடை எண் 9

| வரிசை எண் | ஏலதாரர் பெயர் | கடையின் அளவு சதுரடியில் | மாநகராட்சி மதிப்பு ரூபாயில் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|
| 1. | திரு. ப.வேல்மணி | 147.87 | 6500 | 6750 |

மேற்காணும் கடைக்கு மாநகராட்சி மதிப்பு சதுரடிக்கு ரூ.42/- என நிர்ணயம் செய்யப்பட்டு மாநகராட்சி மதிப்பாக மாதாந்திர உரிமத்தொகை ரூ. 6500/என நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. குத்தகைதாரர் கோரியுள்ள கடையின் அளவு 147.87 சதுரடி ஆகும். மேற்படி கடைக்கு ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு உச்சக் கேள்வித் தொகை பதிவு செய்துள்ளார். குத்தகைதாரர் திரு. ப.வேல்மணி என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் மாதாந்திர உரிமத்தொகை ரூ. 6750/-க்கு பதிவு செய்துள்ளார். இது மாநகராட்சி மதிப்பு ரூ. 6500/-ஐ விட ரூ. 250/- கூடுதலாக உள்ளது.

மேற்படி கடைகள் கட்டி முடிக்கப்பட்டு 2013-14 ம் ஆண்டு முதல் தற்போது வரை 37 முறை ஏலம் விடப்பட்டுள்ளது. இருப்பினும் தொடர்ச்சியாக ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏலம் கோரியதில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. இந்நிலையில் ஒப்பந்தப்புள்ளிகளில் எவரும் கலந்து கொள்ளாத காரணத்தினால் கடைகள் தொடர்ந்து காலியாக இருந்த காரணத்தினாலும், ஒப்பந்தப்புள்ளி தவிர்த்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசு நிறுவனம் என்பதால் கடைஎண் 1 முதல் 6 வரை உள்ள கடைகளுக்கு மாதாந்திர உரிமத்தொகை ரூ.7773/- என்ற அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அரசு நிறுவனம் கடைகளை தொடர்ந்து நடத்த இயலாத நிலையில் கடை எண் 1,2,5 மற்றும் 6 ஆகிய கடைகளை மீண்டும் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி கடைகளுக்கும் சதுரடி ரூ.60/- என்ற பழைய உரிமத்தொகை அடிப்படையிலேயே நிர்ணயம் செய்து மீண்டும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏலம் கோரப்பட்டது. இவற்றில் தனியார் நிறுவனம் கடைஎண் 5 மற்றும் 6- ஆகியவற்றை ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏலத்தில் உச்சக் கேள்வித் தொகைக்கு கோரியதில் இரண்டு கடைகளும் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி தனியார் நிறுவனம் மாதாந்திர உரிமத்தொகை அதிகமாக இருந்த காரணத்தினால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து 31.01.2018 உடன் ஒப்படைப்பதாக தெரிவித்து மீண்டும் மாநகராட்சிக்கு திரும்ப ஒப்படைத்து விட்டனர். அதன்பின் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலம் கோரப்பட்டு வந்தது. ஆனால் மேற்படி கடைகளுக்கான மாதாந்திர உரிமத்தொகை அதிகமாக இருந்த காரணத்தினால் பொது ஏலத்திலும் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. எனவே மேற்படி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் உள்ள தனியார் வணிக வளாகக் கடைகளின் சந்தை மதிப்பை கணக்கீடு செய்து அதனடிப்படையில் பார்வை (2)-ல் காணும் ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று, சதுரடிக்கு ரூ.42/- என குறைத்து மறுநிர்ணயம் செய்யப்பட்டது.

அதன்பின் காலியாக உள்ள கடைகள் 1,2,5,9,10 மற்றும் 11 ஆகியவற்றிற்கு 37-வது முறையாக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கடைஎண் 1, 5 மற்றும் 9- ஆகிய 3 கடைகளுக்கு மட்டும் ஏலதாரர்கள் கலந்து கொண்டு, மாநகராட்சி மதிப்பை விட உச்சக்கேள்வித் தொகைக்கு கோரியுள்ளதால் மேற்படி கடைகளை ஒப்படைக்கவும், மீதமுள்ள கடைகள் 2,10 மற்றும் 11 ஆகியவற்றை மீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலம் கோரவும் பார்வை (4)-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்தரவில் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பின்னேற்பு வழங்கலாம் ந.க.எண் : 10319/2013/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 483 நாள் 13.12.2018**

பின்னேற்பு வழங்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

பொருள் : _உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 69- புலியகுளம் மாநகராட்சி சமுதாயக் கூடம் (மொ்ஸி ஹோம்) மாத உரிமம் அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு 2015-18 வரை ஒப்படைக்கப்பட்டது – உரிமக்காலம் முடிவடைந்தது – சமுதாயக்கூடம் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது – கேட்பு பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக

பார்வை :
1. மாமன்ற தீர்மானம் எண் 384, நாள்.22.01.2015.
2. மொ்ஸி ஹோம் மேனேஜிங் டிரஸ்டிங் கடிதம் நாள்.20.07.18.
3. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள். 04.09.2018.

---------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம் வார்டு எண் 69,புலியகுளம் சாலையில் உள்ள மாநகராட்சி சமுதாயக்கூடத்தை, மொ்ஸிஹோம் என்ற சமுதாய அமைப்பு HIV நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பராமரித்து வருவதாக தெரிவித்து, உரிமத்தொகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டது. அதன்படி அந்த அமைப்பிற்கு மாத உரிமத்தொகை நிா்ணயம் செய்து ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சமுதாய அமைப்பிற்கு வழங்கப்பட்ட உரிமக்காலம் 31.03.2018 உடன் முடிவடைந்தது. மேலும் மேற்படி சமுதாயக் கூடத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்ததால் அங்குள்ள அமைப்பிற்கு தற்காலிகமாக மாற்று இடம் மத்திய மண்டலத்திற்குட்பட்ட சூரியன் வீதியில் உள்ள மாநகராட்சிக் கட்டிடத்தில் கடந்த 20.12.2016-ம் தேதி முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்பட்டு வந்தது. இந்நிலையில் அருகில் உள்ள பொதுமக்கள் எதிர்ப்பால் மேற்படி அமைப்பு இடத்தை காலி செய்து தனியாருக்கு சொந்தமான இடத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை ஒப்படைப்பு செய்ததால் மாநகராட்சிக்கு செலுத்திய வைப்புத் தொகை ரூ. 59500/-ஐ திரும்ப வழங்க பார்வை (2)-ல் காணும் கடிதத்தில் கோரியுள்ளார்.

எனவே மேற்படி சமுதாயக் கூடத்தில் செயல்பட்டு வந்த மொ்ஸிஹோம் என்ற தொண்டு நிறுவனம் கிழக்கு மண்டலத்தில் உள்ள கட்டிடத்திற்கு நிா்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ. 2875/-ஐ 31.03.2018 வரை நிலுவையின்றி செலுத்தியுள்ளதாலும், . மேலும் தணிக்கையிலும் இது குறித்து தடை ஏதும் இல்லாததாலும், மேற்படி நிறுவனம் செலுத்திய வைப்புத் தொகை ரூ. 59500/- ஐ பார்வை (3)-ல் காணும் ஆணையாளா் அவா்களின் அனுமதி பெற்று திரும்ப வழங்கப்பட்டது. மேலும் மேற்படி நிறுவனம் சமுதாயக் கூடத்தை காலிசெய்து ஒப்படைத்த காரணத்தால் 01.04.2018 முதல் மொ்ஸி ஹோம் என்ற தொண்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்து இக்குத்தகை இனத்தை கேட்பு பட்டியலிலிருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண். 10881/2012/அ11 (கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 484 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

பொருள்: பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலத்தில் அமைந்துள்ள 8 மாநகராட்சி நகா்நல மையங்களுக்கு ஒப்பந்தம் அடிப்படையில் ஆயாக்கள் - துப்புரவு பணியாளா்கள் நியமனம் செய்தல் -ஒப்பந்தப்புள்ளி கோருதல் – புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்ததாரா் நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு அனுமதி வேண்டுதல் - தொடா்பாக

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலத்தில் அமைந்துள்ள 8 மாநகராட்சி நகா்நல மையங்களில் ஒப்பந்தம் அடிப்படையில் ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளா்கள் நியமனம் செய்யும் பணிக்காக உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 49 லட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரா் நியமனம் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளதைத் தொடா்ந்து மேற்படி பணி மற்றும் மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தற்போது மாநகராட்சி மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலத்தில் அமைந்துள்ள 8 மாநகராட்சி நகா்நல மையங்களில் மேற்படி பணியை ஒப்பந்ததாரர் M/s. Sanitz Technologies நிறுவனத்தாா் மூலம் 01.12.2017 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவா்களின் பணிக்காலம் வரும் 30.11.2018 உடன் முடிவடைகிறது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்ய காலதாமதம் ஏற்படும் என்கிற காரணத்தால் ஏற்கெனவே இப்பணியை மேற்கொண்டு வரும் மேற்படி ஒப்பந்ததாரரையே ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் தொகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின்படி 01.12.2018 முதல் புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 10028/2018/எம்.இ.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 485 நாள் 13.12.2018**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

பொருள்:- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மற்றும் மத்திய மண்டல பகுதிகளில் அமைந்துள்ள 12 மாநகராட்சி நகர்நல மையங்களுக்கு ஒப்பந்தம் அடிப்படையில் ஆயாக்கள் - துப்புரவு பணியாளர்கள் நியமனம செய்தல் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் – புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு வேண்டுதல் - தொடர்பாக

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மற்றும் மத்திய மண்டலத்தில் அமைந்துள்ள 12 மாநகராட்சி நகர்நல மையங்களில் ஒப்பந்தம் அடிப்படையில் ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்யும் பணிக்காக உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 53 லட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர் நியமனம் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேற்படி பணி மற்றும் மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தற்போது மாநகராட்சி கிழக்கு மற்றும் மத்திய மண்டலத்தில் அமைந்துள்ள 12 மாநகராட்சி நகர்நல மையங்களில் மேற்படி பணியை ஒப்பந்ததாரர் M/s. Sanitz Technologies நிறுவனத்தார் மூலம் 01.12.2017 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களின் பணிக்காலம் வரும் 30.11.2018 உடன் முடிவடைகிறது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்ய காலதாமதம் ஏற்படும் என்கிற காரணத்தால் ஏற்கெனவே இப்பணியை மேற்கொண்டு வரும் மேற்படி ஒப்பந்ததாரரையே ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் தொகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின்படி 01.12.2018 முதல் புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 10027/2018/எம்.இ.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 486 நாள் 13.12.2018</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 22

கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண்.64க்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 64 | வார்டு எண் 64-க்குட்பட்ட சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள அம்மா உணவகத்திற்கு காவலர்களை நியமித்தல்<br>ந.க.எண்:- 11291/2018/எம்டி3 | 8.50 |

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:- 11291/2018/எம்டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 487 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 23**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 67 மற்றும் 69-க்குட்பட்ட பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்தை பராமரிப்பு செய்யும் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி இப்பணியினை உடனடியாக செய்து முடிக்க வேண்டியதை தொடர்ந்து மதிப்பீடுகள் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 67 | வார்டு எண்67-க்குட்பட்ட மருதூர் பகுதி திருமால் வீதியில் உள்ள பொது கழிப்பிடத்தை பராமரிப்பு செய்யும் பணி ந.க.எண் 11097/2018/எம்.டி.3 | 4.20 |
| 2 | 69 | வார்டு எண் 69-க்குட்பட்ட புலியகுளம் பங்கஜா மில் ரோட்டில் அமைந்துள்ள கழிப்பிடம், மசால் லே அவுட் மற்றும் திருச்சி சாலை கழிப்பிடத்திற்கு மராமத்து செய்தல். ந.க.எண் 11098/2018/எம்.டி.3 | 2.65 |

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.11097/2018/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 488 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 24**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.15,16,17,18&19க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 15 | வார்டு எண்.15க்குட்பட்ட பி.என்.புதூர் பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். (ந.க.எண்.11610/2018/எம்டி.2) | 4.00 |
| 2 | 16 | வார்டு எண்.16க்குட்பட்ட வடவள்ளி ராஜீவ் காந்தி நகர் பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். (ந.க.எண்.11612/2018/எம்டி.2) | 5.00 |
| 3 | 16 | வார்டு எண்.16க்குட்பட்ட வடவள்ளி பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். (ந.க.எண்.11611/2018/எம்டி.2) | 4.80 |
| 4 | 17,18, 19 | வார்டு எண்.17,18,19க்குட்பட்ட வடவள்ளி, வீரகேரளம் மற்றும் சுண்டப்பாளையம் பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். (ந.க.எண்.11613/2018/எம்டி.2) | 4.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11610/2018/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 489 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 77–க்குட்பட்ட பகுதியில் அபிவிருத்தி பணிகள் செய்ய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 77 | வார்டு எண் 77- க்குட்பட்ட ராமமூர்த்தி ரோடு பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | **21.50** |
| மொத்தம் | | | **21.50** |

மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 11294/2018/ எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 490 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 1 –காந்தி பூங்கா குடிநீர் விநியோகப்பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது இப்பணிகளை செய்து முடிக்க ஆணையாளர் அவர்கள் உத்திரவிட்டதை தொடர்ந்து இம்மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது அதன் விவரம்

| வ. எண் | ந க எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 11814/2018/எம்டி2 | கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் காந்தி பூங்கா குடிநீர் விநியோக பிரிவு அலுவலக வளாகத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிகளுக்கு குளோரின் வாயு இயந்திரம் வழங்கி பொருத்தி இயக்குதல் பணி | 13.10 |
| 2 | 11813/2018/எம்டி.2 | கோவை மாநகராட்சி பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிகளுக்கு குளோரின் வாயு உருளைகள் (Gas Chlorine Cylinder) வழங்குதல் பணி | 10.00 |

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11814/2018/எம்டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 491 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 27

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 38,39,40,41,44,46 மற்றும் 47க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்று நீர் மின் மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம்.

| **வ. எண்** | **வார்டு எண்** | **பணிகளின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | 38 | வார்டு எண் 38 க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்று நீர் மின் மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு(ந.க.எண்: 11555 / 2018/ MD2) | 6.50 |
| 2. | 39 | வார்டு எண் 39 க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்று நீர் மின் மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு(ந.க.எண்: 11554 /2018/ MD2) | 6.75 |
| 3. | 40 | வார்டு எண் 40 க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்று நீர் மின் மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு(ந.க.எண்: 11556 /2018/ MD2) | 7.70 |

| | | | |
|---|---|---|---|
| 4. | 41 | வார்டு எண் 41 க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்று நீர் மின் மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு(ந.க.எண்: 11557 /2018/ MD2) | 11.20 |
| 5. | 44 | வார்டு எண் 44 க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்று நீர் மின் மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு(ந.க.எண்: 11558 /2018/ MD2) | 11.00 |
| 6. | 46 | வார்டு எண் 46 க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்று நீர் மின் மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு(ந.க.எண்: 11559 /2018/ MD2) | 5.50 |
| 7. | 47 | வார்டு எண் 47 க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்று நீர் மின் மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு(ந.க.எண்: 11560 /2018/ MD2) | 8.00 |

மேற்பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வரைவு கூட்டபொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11555 / 2018/ MD2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 492 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 28

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம், வார்டு எண் - 68க்குட்பட்ட மாநகராட்சி ஆண்கள் மேல்நிலை பள்ளிக்கு மராமத்து பணிகள் செய்தல் பணிக்கு ரூ.58,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரியதில் திரு.R.ராஜன் அவர்களது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு ஒப்பந்ததாரரால் ஒப்பந்தபத்திரம் சமர்பிக்கப்பட்டு, தற்போது பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கோயம்புத்தூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பள்ளியை ஆய்வு செய்யும் பொழுது பள்ளி வளாகத்தில் கட்டப்பட்டு வரும் கூட்ட அரங்கினை பொதுமக்களும் உபயோகப்படுத்தும் வகையில் சமுதாய கூடமாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். மேலும் கூட்ட அரங்கிற்கென பிரத்யேகமாக பள்ளியின் கிழபுறத்தில் நுழைவாயில் அமைக்கவும், கூட்ட அரங்கிற்கு சுற்றுசுவர் கட்டி அரங்கினுள் மேற்கொள்ள வேண்டிய பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களும், மாணவர்களும் உபயோகப்படுத்தும் வகையில் போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை கடிதம் அளித்துள்ளார்.

எனவே இப்பள்ளி வளாகத்தில் கட்டப்பட்டு வரும் கூட்டஅரங்கிற்கு சுற்றுசுவர் கட்டவும், கூட்டஅரங்கின் கிழபுறத்தில் நுழைவாயில் அமைக்கவும், இக்கூட்ட அரங்கை பொதுமக்களும் உபயோகப்படுத்தும் வகையில் சமுதாய கூடமாக உபயோகப்படுத்தவும் ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவ்வாறு பணி மேற்கொள்ளும்பொழுது மதிப்பீட்டை விட சில இனங்கள் கூடுதலாகவும், சில இனங்கள் புதியதாகவும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பணியிடத்தின் தன்மைகேற்ப பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு சில இனங்கள் கூடுதலாகவும் சில இனங்கள் புதியதாகவும் மேற்கொள்ளவும், இப்பணியினை இம்மதிப்பீட்டு தொகைக்குள் செய்து முடிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1778/2016/ எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 493 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 29

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது – மதிப்பீட்டுத் தொகையான ரூ.75,00,000/—க்கு நிர்வாக அனுமதி வேண்டுவது தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 5 மண்டலங்களுக்குட்பட்ட 100 வார்டுகளில் அழுத்தம் குறைவுள்ள பகுதி, குடிசை பகுதி, மேடான பகுதி தவிர பராமரிப்பு பணிகளான குடிநீர் கசிவு சரிசெய்தல், நெடுஞ்சாலைத்துறை சாலைகள் அகலப்படுத்துதல் பணிகளின் போது சேதமடையும் பிரதான குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல், கோடை காலத்தில் மின்தடை நேரங்களில் ஏற்படும் குடிநீர் விநியோக தடை காலங்களில் மற்றும் குடிநீர் சம்பந்தமான அன்றாடம் பெறப்படும் புகார்களுக்கு ஏற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் 1) பாரதி பூங்கா 2) புலியகுளம் 3) வரதராஜபுரம் 4) கணபதி MSR மற்றும் 5) சாரதாமில் (சுந்தராபுரம்) மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து, மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் சேர்த்து மாநகராட்சி டேங்கர் லாரிகள் 7 எண்ணிக்கை தவிர தேவைக்கேற்ப தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வரும் மதிப்பீட்டு ஒப்பந்த தொகை முடிவடையவுள்ளதால் மதிப்பீடு ரூ.75,00,000/—க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 11844 /2018/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 494 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 30

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.6க்குட்பட்ட சிவா நகர் தார்சாலை புதுப்பித்தல் பணிக்கு ரூ.14.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதிவேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11737/2018/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 495 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 31

கோயம்புத்தூர் மாநராட்சி மத்திய மண்டலம் – வார்டு எண் 73க்குட்பட்ட சுங்கம் மாநகராட்சி பிரிவு அலுவலகம், வரி வசூல் மையம் மற்றும் மத்திய மண்டலம் கட்டிடம் ஆகிய கட்டிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்ய மதிப்பீடு தயாரிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களிடம் 17.10.2018 ம் தேதியன்று அனுமதி பெறப்பட்டது. ஆணையாளர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மாநகராட்சி பிரிவு அலுவலகம், வரி வசூல் மையம் மற்றும் மத்திய மண்டலம் கட்டிடம் ஆகிய கட்டிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்ய ரூ.23,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 10269/2018/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 496 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 32**

கோயம்புத்தூர் மாநராட்சி மத்திய மண்டலம் – வார்டு எண் **73**க்குட்பட்ட சுங்கம் பகுதியில் அமைந்துள்ள நேரு மகளிர் பூங்காவினில் உள்ள நீருற்று, ஆழ்குழாய் கிணறு, உடற்பயிற்சி கூடம் ஆகியவற்றை இயக்குதல் மற்றும் பூங்காவினை **2** வருட காலத்திற்கு **(01.01.2019** முதல் **31.12.2020** வரை) பராமரித்தல் ரூ.**21,65,000/-**க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : **11836/2018**/எம்.டி.**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 497 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 33**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 8-க்குட்பட்ட கிரி நகர், கே.கே.புதூர் பிரதான சாலை பகுதிகள் மழைநீர் வடிகால் பழுதடைந்து உள்ளது. எனவே மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான மதிப்பீடு ரூ.20,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 11852/2018/ எம்.டி. 2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 498 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 34**

கோயம்புத்தூர் மாநகராட்சி, பொறியியல் பிரிவில், மாநகராட்சி பதிவு பெற்ற முதலாம் வகுப்பு ஒப்பந்ததாராக காலம்சென்ற திரு.ஆர்.சுந்தரராஜ், கதவு எண்.**1/8**, மாரபோயர் வீதி, குறிச்சி, சுந்தராபுரம், கோவை. அவர் கோயம்புத்தூர் மாநகராட்சி பணிகளை மேற்கொண்டு வந்தார். அன்னார் ஒப்பந்ததாரர் திரு. ஆர்.சுந்தரராஜ் அவர்கள் கடந்த தேதி **13/10/2018** அன்று திடீரென காலமாகி விட்டார். மேற்படி ஒப்பந்ததாரர் அவர்கள் கடந்த **30** ஆண்டுகளாக கோயம்புத்தூர் மாநகராட்சி பணிகளை மேற்கொண்டு வந்தார். இந்நிலையில் காலம்சென்ற ஒப்பந்ததாரர் திரு. ஆர்.சுந்தரராஜ் அவர்கள் பெயரில் கோயம்புத்தூர் மாநகராட்சியினால் வழங்கப்பட்ட நடைபெற்று வரும் பணி மற்றும் துவங்கப்படவுள்ள பணிகள் அனைத்தும் அவரது மனைவி திருமதி .கீதா சுந்தரராஜ் அவர்களின் மேற்பார்வையில் மாநகராட்சியினால் வழங்கப்பட்ட பணிகளை செவ்வனே முடித்து தருவதற்கு அனுமதி வேண்டி விண்ணப்பிக்கப்பட்டது.

மேற்படி காலம்சென்ற ஒப்பந்ததாரர் திரு. ஆர்.சுந்தரராஜ் அவர்களின் மனைவி திருமதி .கீதா சுந்தரராஜ் அவர்களுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சியினால் வழங்கப்பட்டு நடைபெற்று வரும் பணி மற்றும் துவங்கப்படவுள்ள பணிகள் அனைத்தும் மேற்கொள்ளவும், மற்றும் மாநகராட்சியால் ஒப்பந்ததாரர் திரு. ஆர்.சுந்தரராஜ் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ள பட்டியல் தொகை , முடிவுற்ற பணிகளுக்கு செலுத்திய வைப்புத் தொகை (EMD), கூடுதல் வைப்புத் தொகை (FSD), பிணைப்புத் தொகை ( Withheld) மற்றும் சேமிப்பு பத்திரம் (NSC Bond) ஆகியவற்றை திருமதி .கீதா சுந்தரராஜ் அவர்களுக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.**11462 /2018**/எம்.டி.**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 499 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 35

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2018-19) -ன் கீழ் ரூ.4000.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கீழ்கண்டுள்ளவாறு 18 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நிர்வாக அனுமதி நாள் 03.08.2018 தீர்மான எண் 271-ல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தாரர் |
|---|---|---|---|---|---|
| **6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 1** | வார்டு எண்-40 மற்றும் 47 க்குட்பட்ட எக்ஸ்சர்வீஸ் மென் காலனி, வி.ஜி. ராவ் நகர், மகாத்மா காந்தி நகர், சிந்தாமணி நகர் மருதய்யா நகர் மற்றும் வேலன் நகர் ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல். | 245.00 | **24.10.2018** | 1.தி/ள். கே.எஸ்.ஆர் & கம்பெனி 0.10%அதிகம் 2.திரு.சி.கே. சுந்தரம் 0.16%குறைவு | திரு.சி.கே. சுந்தரம் 0.16%குறைவு |
| **6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 2** | வார்டு எண்-44 க்குட்பட்ட நல்லாம்பாளையம் பிரதான சாலையில் சோப் கம்பெனி முதல் மயானம் வரை மறுதார்தளம் அமைத்தல். | 200.00 | **24.10.2018** | 1.திரு.ஜே.ராபர்ட் ராஜா 10.87%அதிகம் 2.தி/ள்.ரிவர் கிரீன் லேண்ட்ஸ்கேப் 4.95%அதிகம் 3.திரு.ஏ. அம்மாசையப்பன் 9.47% அதிகம் | தி/ள்.ரிவர் கிரீன் லேண்ட்ஸ்கேப் 4.95%அதிகம் |
| **6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 3** | வார்டு எண்-44 க்குட்பட்ட நல்லாம்பாளையம் பிரதான சாலையில் MTP சாலை முதல் சோப் கம்பெனி வரை மறுதார்தளம் அமைத்தல். | 185.00 | **24.10.2018** | 1. திரு.ஏ. அம்மாசையப்பன் 10.23% அதிகம் 2.தி/ள். எம்.சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், 8.12%அதிகம் 3.தி/ள்.பி. மல்லையன் பில்டர்ஸ் 4.99%அதிகம் | தி/ள்.பி.மல்லையன் பில்டர்ஸ் 4.99%அதிகம் |
| **6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 5** | வார்டு எண்–37 க்குட்பட்ட எல்லப்பன் வீதி, வார்டு எண்-56 க்குட்பட்ட சௌரிபாளையம் பிரதான சாலையில் அவினாசி சாலை முதல் பி.எஸ்.ஜி மருத்துவமனை வரை, சௌரிபாளையம் பிரதான சாலையில் பி.எஸ்.ஜி மருத்துவமனை முதல் காவேட்டி நாயுடு சந்திப்பு வரை மற்றும் பீளமேடு புதூர் ஆர்.கே காலனி பிரதான சாலை ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 209.00 | **24.10.2018** | 1.தி/ள்.விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்ச்சர்ஸ் 7.96% அதிகம் 2.தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.93%அதிகம் 3.தி/ள்.பி.எஸ்.கே அசோசியேட் 9.68%அதிகம் | 2.தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.93%அதிகம் |
| **6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 6** | வார்டு எண்–57 க்குட்பட்ட ஜீ.வி ரெசிடென்சி பிரதான சாலை தென்வடக்கு சாலை எண் 1, ஜீ.வி ரெசிடென்சி பிரதான சாலை தென்வடக்கு சாலை எண் 2 மற்றும் ஜீ.வி ரெசிடென்சி பிரதான குறுக்கு சாலை எண் 2 ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 223.00 | **24.10.2018** | 1.தி/ள்.எம். சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், 6.64%அதிகம் 2.தி/ள்.பி.மல்லையன் பில்டர்ஸ் 8.07%அதிகம் 3.திரு.ஏ. வெங்கடாசலம் 4.93%அதிகம் | திரு.ஏ. வெங்கடாசலம் 4.93%அதிகம் |
| **6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 7** | வார்டு எண்-57 க்குட்பட்ட ஜீ.வி ரெசிடென்சி பிரதான குறுக்கு சாலை எண் 1, வார்டு எண்-58 க்குட்பட்ட ஆர்.வி.எல் சந்திப்பு முதல் விஜயலட்சுமி நகர் சந்திப்பு வரை மற்றும் விஜயலட்சுமி நகர் சந்திப்பு முதல் தாமோதரசாமி லே அவுட் சந்திப்பு வரை ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 194.00 | **24.10.2018** | 1.திரு.ஜே.ராபர்ட் ராஜா 8.66%அதிகம் 2.திரு.ஆர். கிருஷ்ணசாமி 9.53%அதிகம் 3.திரு.ஏ. அம்மாசையப்பன் 4.95% அதிகம் | திரு.ஏ. அம்மாசையப்பன் 4.95% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 8 | வார்டு எண்-59 க்குட்பட்ட வசந்தாமில் சந்திப்பு முதல் நீலிகோணம்பாளையம் வரை, சக்தி நகர், சின்னசாமி லேஅவுட் வார்டு எண்-61 க்குட்பட்ட பட்டணம் இட்டேரி சாலை ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல். | 225.00 | 24.10.2018 | 1.திரு.ஜே.ராபர்ட் ராஜா 4.91%அதிகம்<br>2.தி/ள்.ரிவர் கிரீன் லேண்ட்ஸ்கேப் 9.12%அதிகம்<br>3.திரு.ஏ. அம்மாசையப்பன் 10.45% அதிகம் | திரு.ஜே.ராபர்ட் ராஜா 4.91%அதிகம் |
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 9 | வார்டு எண்–62 க்குட்பட்ட வசந்தாமில் சாலை, வார்டு எண்-65 க்குட்பட்ட சௌரிபாளையம் சாலை மற்றும் வார்டு எண்-75 க்குட்பட்ட சாராமேடு ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 225.00 | 24.10.2018 | 1.தி/ள்.வர்தான் இன்ப்ராஸ்ட்ரக்ச்சர், 4.98%அதிகம்<br>2.திரு.ஆர்.தனபால் 9.90%அதிகம்<br>3.திரு.ஏ. அம்மாசையப்பன் 9.41%அதிகம் | தி/ள்.வர்தான் இன்ப்ராஸ்ட்ரக்ச்சர் 4.98%அதிகம் |
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 11 | வார்டு எண்-10,11 மற்றும் 12-க்குட்பட்ட அருணாச்சலம் வீதி, கே.எஸ். ராமசாமி வீதி, சின்னசுப்பண்ணன் வீதி, எம்.ஏ. பழனிச்சாமி வீதி, பாலசுப்ரமணியன் வீதி, கவுண்டப்பன் வீதி, பெரியசுப்பண்ணன் வீதி, மணியம் வேலப்பர் வீதி, பதுரசாமி வீதி, சிந்தாமணி நகர், சர்ச் ரோடு, மருதக்குட்டி வீதி மற்றும் ராமலிங்கம் நகர் குறுக்கு 1,2,3&4 பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல். | 260.00 | 24.10.2018 | 1.தி/ள். ஜே.பி.எஸ் கன்ஸ்ட்ரக்சன் 4.99%அதிகம்<br>2.திரு.கே.நடராஜன் 6.47%அதிகம் | தி/ள். ஜே.பி.எஸ் கன்ஸ்ட்ரக்சன் 4.99%அதிகம் |
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 12 | வார்டு எண்-12,13 மற்றும் 14-க்குட்பட்ட மணியம்காளியப்பன் வீதி, சின்னம்மாள் வீதி, பி.வி. கிருஷ்ணன் வீதி, ராமசாமி வீதி, கே.கே.புதூர் பிரதான சாலை, ராமசாமி லே-அவுட், ஜானகி நகர், கல்யாணி நகர், ராமலிங்கம் நகர் 5வது குறுக்கு, நாச்சிமுத்து லே-அவுட், வெங்கடாபுரம், பார்த்தசாரதி வீதி, அம்மன் கோவில் வீதி, விநாயகர் கோவில் வீதி, ஆர்.கே நாயுடு லே-அவுட், வசந்தம் நகர், அண்ணா வீதி, பாபா வீதி, புவனேஸ்வரி நகர், அம்பேத்கர் சாலை, பகத்சிங் வீதி 1,2&3, கட்டபொம்மன் சாலை, அண்ணா நகர், காந்தி நகர், மருதகோனார் வீதி, தெக்கலூார் பிரதான சாலை, மணியகாரன் வீதி, பொன்காளிகோனார் வீதி, சாஸ்திரி சாலை, தவசி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல். | 240.00 | 24.10.2018 | 1.தி/ள்.எஸ்.பி. பில்டர்ஸ் 4.96%அதிகம்<br>2.திரு.ஆர்.தனபால் 9.95%அதிகம்<br>3.திரு.ஏ. அம்மாசையப்பன் 9.57%அதிகம் | தி/ள்.எஸ்.பி. பில்டர்ஸ் 4.96%அதிகம் |
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 13 | வார்டு எண்-15 மற்றும் 21-க்குட்பட்ட பொன்னுசாமி நகர், ஜெகதீஸ் நகர், புதுகிணறு சந்து, ஐஸ்வர்யா நகர், முல்லை நகர், ஸ்ரீநகர், பொம்மநாயக்கன் வீதி, வீராசாமி நகர், ராதிகா அவென்யூ, ராம்ஸ் நகர், சின்னசாமி நகர், ரேவதி நகர், பாலன் நகர், ஸ்ரீ நகர் மற்றும் லிங்கனூர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை, நாயக்கர் தோட்டம் பிரதான சாலை, பனைமரத்தூர் பிரதான சாலை மற்றும் கோகுலம் காலனி பிரதான சாலை ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 200.00 | 24.10.2018 | 1.தி/ள். எம்.சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் 5.78%அதிகம்<br>2.தி/ள்.பி.மல்லையன் பில்டார்ஸ் 6.09%அதிகம்<br>3.தி/ள்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ்& பில்டர்ஸ் 4.99%அதிகம் | தி/ள்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் & பில்டர்ஸ் 4.99%அதிகம் |
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 14 | வார்டு எண் 16,18 மற்றும் 19 க்குட்பட்ட மருதமலை பிரதான சாலை முதல் அஜ்ஜனூர் பிரதான சாலை வரை தார்தளம் அமைத்தல் | 275.00 | 24.10.2018 | 1.தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பி லிட்., 4.97 %அதிகம்<br>2.திரு. ஆர்.தனபால் 9.97%அதிகம்<br>3.திரு.ஏ. அம்மாசையப்பன் 9.41%அதிகம் | தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பி லிட்., 4.97 %அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 15 | வார்டு எண்-20 மற்றும் 22- க்குட்பட்ட சுகர்கேன் பிரதான சாலை, நேதாஜி பிரதான சாலை, லட்சுமி நகர், ராதாகிருஷ்ணன் சாலை, திலகர் வீதி மற்றும் ராஜன் காலனி, என்.எஸ்.ஆர் பிரதான சாலை ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 200.00 | 24.10.2018 | 1.திரு.கே.மாரப்பன் 4.70%அதிகம்<br><br>2.தி/ள்.ஸ்ரீ கோமதியம்மன் அன்ட் கம்பெனி 7.81%அதிகம்<br><br>3.திரு.எம்.துரைசாமி 9.80%அதிகம் | திரு.கே.மாரப்பன் 4.70%அதிகம் |
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 16 | வார்டு எண்-23 மற்றும் 24-க்குட்பட்ட குடிநீர் விநியோகத்திற்காக வெட்டப்பட்ட சாலை பகுதிகளான ராமசந்தரா சாலை, ஆரோக்கியசாமி கிழக்கு சாலை, கண்ணுசாமி சாலை, லோகமணியா சாலை, கிழக்கு சம்மந்தம் சாலை, சர் சண்முகம் சாலை, பொன்னுரங்கம் சாலை, வெங்கிட்டசாமி சாலை, பெரியசாமி சாலை, பாஷீயகாரலூார் சாலை, வின்செண்ட் காலனி மற்றும் குரு கோவிந்த் சிங் சாலை, சிவசுப்ரமணியம் சாலை, மெக்ரிக்கர் சாலை, தியாகிகுமரன் சாலை, ராமலிங்கம் சாலை, லைட் ஹவுஸ் சாலை ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல். | 200.00 | 24.10.2018 | 1.திரு.எம். துரைசாமி 15.00%அதிகம்<br><br>2.திரு.ஆர். கிருஷ்ணசாமி 4.97%அதிகம்<br><br>3.திரு.ஏ. அம்மாசையப்பன் 10.00% அதிகம் | திரு.ஆர். கிருஷ்ணசாமி 4.97%அதிகம் |
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 17 | வார்டு எண்- 85 மற்றும் 86 க்குட்பட்ட அருள் நகர், அன்பு நகர் பிரதான சாலை, ரேஸ்மா கார்டன், அன்பு நகர் குறுக்கு சாலை, பொன்விழா நகர் முதல் உக்கடம் STP பிளாண்ட் சாலை, பிரபு நகர் மற்றும் பிரபு நகர் விரிவாக்கம் ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைத்தல். | 301.00 | 24.10.2018 | 1.திரு.எஸ். ரத்தின வேலுசாமி 6.16%அதிகம்<br>2.திரு.ஜே.ராபர்ட் ராஜா 5.16%அதிகம்<br>3. தி/ள். ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.85 %அதிகம் | தி/ள். ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.85 %அதிகம் |
| 6441/ 2018/ எம்டி.3/ சிப்பம் 18 | வார்டு எண்-51 மற்றும் 73- க்குட்பட்ட அழகப்பா சாலை, மேற்கு பவர் ஹவுஸ் சாலை முதல் காந்திபுரம் 7 வது வீதி விரிவாக்கம் சாலை வரை, பவர் ஹவுஸ் சாலை, ஒசூர் சாலை, போலீஸ் கமிஷ்னர் அலுவலக சாலை மற்றும் ஹெட் கோட்ரஸ் சாலை ஆகிய பகுதிகளில் மறு தார்தளம் அமைத்தல். | 260.00 | 24.10.2018 | 1.தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 9.77%அதிகம்<br>2.திரு. ஆர்.தனபால் 9.33%அதிகம்<br><br>3.தி/ள்.பி.எஸ்.கே அசோசியேட் 4.96%அதிகம் | தி/ள்.பி.எஸ்.கே அசோசியேட் 4.96%அதிகம் |

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மேற்படி பணிகளை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளில் மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 6441/2018/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 500 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 36

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம். ரூ. 377.13 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஆணை (3டி) எண். 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி–3) துறை நாள்: 24.10.2007–மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில், ஐந்தாவது சிப்பப்பணியான நஞ்சுண்டாபுரம் பகுதியில் 40 எம்எல்டி கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு வடிவமைப்பு, கட்டுமானம், இயக்கம் மற்றும் பராமரிப்பு (Design, Build, Operate & Transfer – DBOT Basis) செய்து ஒப்படைக்கும் முறையில் ரூ.32.22 கோடிக்கு கடந்த 27.02.2008 அன்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த திரு. இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) என்ற நிறுவனத்திற்கு ரூ. 33.79 கோடி மற்றும் ரூ. 4.80 கோடிக்கு (இயக்கம் மற்றும் பராமரிப்பு) மாமன்றத்தின் தீர்மான எண். 273, நாள்: 27.03.2008–ல் ஒப்புதல் வழங்கி, பதினெட்டு (18) மாத காலத்தில் பணி முடிக்க கடந்த 24.04.2008–ல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் கடந்த 05.05.2008 அன்று துவக்கப்பட்டு நிர்வாக அலுவலகம், கழிவு நீர் சேகரிப்பு கிணறு மற்றும் அதற்கான இயந்திரங்கள் மற்றும் மின் உபகரணங்கள் கொள்முதல் ஆகிய பணிகள் 47 சதவீதம் முடிவுற்ற நிலையில் அருகாமையில் வசித்து வரும் குடியிருப்போரால் தொடரப்பட்ட வழக்கிற்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை உத்தரவின் படி கடந்த 23.04.2009 முதல் பணி நிறுத்தி வைக்கப்பட்டது. மாநகராட்சிக்கு சாதகமாக வழங்கப்பட்ட தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு எதிராக மனுதாரர்களால் உச்ச நீதி மன்றத்தில் (புது டெல்லி) மாநகராட்சிக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டது. உச்ச நீதி மன்றம் மேற்படி மேல் முறையீட்டை ஆரம்ப நிலையிலேயே கடந்த 21.08.2017 அன்று தள்ளுபடி செய்து மாநகராட்சிக்கு சாதகமான உத்தரவு வழங்கப்பட்டது.

எனவே உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் 25.10.2012 அன்று கீழ்கண்ட சில நிபந்தனைகளுடன் கட்டுமான பணிகளை மீண்டும் தொடர அனுமதி (Consent to Establish) வழங்கியது.

1. கழிவு நீர் சேகரிக்கும் தொட்டிகள் இரண்டினை (C – Tech Basin) மாற்றி அமைத்தல்.

2. சுத்திகரிப்பு நிலையத்தின் சுற்றுச்சுவரின் உயரத்தை அதிகப்படுத்துதல்.

3. கழிவு நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து வெளிப்படும் துர்நாற்றத்தை குறைக்க கருவி (Odour Mitigation System) அமைத்தல்.

4. மின்னாக்கியின் கொள்ளளவை (Diesel Generator) 750 KVAக்கு பதிலாக 1250 KVA க்கு அதிகப்படுத்துதல்.

5. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பை நேரடி ஆய்வு செய்யும் வகையில் கணினி முறையில், நஞ்சுண்டாபுரத்திலிருந்து சென்னையிலுள்ள மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இடையே நேரடி தொடர்புக்கு வழிவகை செய்தல்.

இந்நிலையில் எற்கனவே பணி மேற்கொண்டு வந்த நிறுவனமான திரு. இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) நிறுவனம் மீண்டும் பணியினை தொடர முடியாத நிலையில் உள்ளதாக தெரியவந்ததால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தம் மாமன்ற ஒப்புதலுடன் கடந்த 08.06.2018–ல் ரத்து செய்யப்பட்டது.

எனவே, மேற்படி சிப்ப பணியில், மீதமுள்ள பணிகளுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் விதித்த நிபந்தனைக்குட்பட்ட பணிகளை மேற்கொள்ள ரூ. 469.62 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி அரசு ஆணை எண். 104 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 11.10.2017–ல் பெறப்பட்டுள்ளது. மேலும் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களிடம் கடந்த 03.08.2018–ல் ரூ. 43.60 கோடி மதிப்பீட்டிற்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திருத்திய வடிவமைப்புக்கான கட்டுமானப்பணிக்கும், 5வருட கால பராமரிப்பு மற்றும் இயக்கத்திற்காகவும் உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று கடந்த 28.09.2018 தேதியில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கீழ்கண்ட இரு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியது.

1. திரு. ஸீ ராக் & பி&சி புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிட் (ஜேவி), ஈரோடு.
2. திரு. ஈகோ புரொடக்சன் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட், சென்னை.

மேற்கண்ட இரு நிறுவனங்களின் விலைப்புள்ளி (Price Bid) கடந்த **14.11.2018** அன்று திறக்கப்பட்டது. இதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. ஸீ ராக் – திரு. பி&சி புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிட் (ஜேவி), ஈரோடு நிறுவனம் மாநகராட்சியின் கோரிக்கையின் படி விலை குறைப்பு செய்த பின்னர் வழங்கிய விலை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**ஒப்புநோக்கு பட்டியல் விபரம்**

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பு (கட்டுமானப் பணிக்கு மட்டும்) ரூ. இலட்சத்தில் | ஒப்பந்த விலை புள்ளி விபரம் | | கட்டுமானப் பணியின் மதிப்பீட்டு தொகைக்கு அதிகம் |
|---|---|---|---|---|---|
| | | | கட்டுமானப் பணிகள் மட்டும் ரூ. இலட்சத்தில் | இயக்கமும் பராமரிப்பும் (5 வருட காலத்திற்கு) ரூ. இலட்சத்தில் | |
| 1. | திரு. ஸீ ராக் – திரு. பி & சி புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஜேவி),ஈரோடு. | 4360.00 | 5232.00 | 592.46 | மதிப்பீட்டிற்கு 20 % கூடுதல் |
| 2. | திரு. ஈகோ புரொடக்சன் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட், சென்னை. | 4360.00 | 5580.00 | 722.42 | மதிப்பீட்டிற்கு 27.98 % கூடுதல் |

| வ. எண் | நிறுவனம் | கட்டுமானப்பணி | | இயக்கம் மற்றும் பராமரிப்பு | |
|---|---|---|---|---|---|
| | | விலை குறைப்பிற்கு முன் (ரூ. இலட்சத்தில்) | விலை குறைப்பிற்கு பின் (ரூ. இலட்சத்தில்) | விலை குறைப்பிற்கு முன் (ரூ. இலட்சத்தில்) | விலை குறைப்பிற்கு பின் (ரூ. இலட்சத்தில்) |
| 1. | திரு. ஸீ ராக் – திரு. பி & சி புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஜேவி), ஈரோடு. | 5232.00 (20 % கூடுதல்) | முதலாம் விலை குறைப்பு 4970.40 (14 % கூடுதல்) | 592.46 | முதலாம் விலை குறைப்பு 592.00 |
| | | | இரண்டாவது விலை குறைப்பு 4795.50 (9.99 % கூடுதல்) | | இரண்டாவது விலை குறைப்பு 591.50 |

மேற்படி பணிக்கு இறுதியாக வழங்கப்பட்ட விலைப்புள்ளி தொகை ரூ. **47,95,50,000/–** (ரூபாய் நாற்பத்து ஏழு கோடியே தொன்னூற்று ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் ஐந்து வருட கால இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்ககான தொகை ரூ. **5,91,50,000/–** (ரூபாய் ஐந்து கோடியே தொன்னூற்று ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகியவற்றை ஏற்பது குறித்து **"மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்"** முடிவிற்காக முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

**அ)** மேற்கண்ட பணிக்கு திரு. ஸீ ராக் & பி&சி புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிட் (ஜேவி), ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. **47,95,50,000/–** மற்றும் ஐந்து வருட கால இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்ககான தொகை ரூ. **5,91,50,000/–** ஆகியவை நடப்பாண்டான **2018–19** ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டின் விலை விகிதத்தோடு ஒப்பீடு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட **9.99%** சதவீதம் மட்டுமே கூடுதலாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை **"மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு"** வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ஆ)** மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலான விலை விகிதத்தில் வழங்கப்பட்டுள்ள (மதிப்பீட்டிற்கு **9.99%** கூடுதல்) மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்தும், இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவினத்தை மாநகராட்சி குடிநீர் விநியோகப்பரிவிலிருந்தும் மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க எண். 8513/2018/ஜேஎன்4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 501 நாள் 13.12.2018**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 37

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆணையாளரின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுறது.

| வ.எண் | ந.க.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 11885 /2018/MD2 | வார்டு எண் 1, 2, 3 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11885 /2018/MD2) | 4.50 |
| 2. | 11989 /2018/MD2 | வார்டு எண் 4 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11989 /2018/MD2) | 4.70 |
| 3. | 11884 /2018/MD2 | வார்டு எண் 26,27,28 மற்றும் 42 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11884 /2018/MD2) | 9.60 |
| 4. | 11883 /2018/MD2 | வார்டு எண் 31 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11883 /2018/MD2) | 2.80 |
| 5. | 11882 /2018/MD2 | வார்டு எண் 38 க்குட்பட்ட எல்லைத்தோட்டம் பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11882 /2018/MD2) | 3.50 |
| 6. | 11881 /2018/MD2 | வார்டு எண் 38 க்குட்பட்ட சி.எம்.சி காலனி பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11881 /2018/MD2) | 3.30 |
| 7. | 11880 /2018/MD2 | வார்டு எண் 38 க்குட்பட்ட வி.கே. ரோடு (மயானம் அருகில்) பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11880 /2018/MD2) | 3.30 |
| 8. | 11879 /2018/MD2 | வார்டு எண் 39 க்குட்பட்ட குரும்பர் வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11879 /2018/MD2) | 4.30 |
| 9. | 11876 /2018/MD2 | வார்டு எண் 39, க்குட்பட்ட மாஸ்தி வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11876/2018/MD2) | 2.40 |
| 10. | 11877 /2018/MD2 | வார்டு எண் 40 க்குட்பட்ட ஷோபா நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11877/2018/MD2) | 2.90 |
| 11. | 11876/2018/MD2 | வார்டு எண் 40 க்குட்பட்ட ஸ்ரீவள்ளி நகர் மற்றும் மட்டசாலை பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11876 /2018/MD2) | 2.90 |
| 12. | 11875/2018/MD2 | வார்டு எண் 41 க்குட்பட்ட கணபதி பஸ் ஸ்டாண்ட் பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. ( ந.க.எண் 11875 /2018/MD2) | 4.30 |

| | | | |
|---|---|---|---|
| 13. | 11874/2018/MD2 | வார்டு எண் 41 க்குட்பட்ட மாணிக்கவாசகா நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11874 /2018/MD2) | 2.30 |
| 14 | 11873/2018/MD2 | வார்டு எண் 41 க்குட்பட்ட வாசுகி வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11873 /2018/MD2) | 2.40 |
| 15 | 11872/2018/MD2 | வார்டு எண் 41 க்குட்பட்ட ராஜரத்தினம் வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11872 /2018/MD2) | 2.90 |
| 16 | 11871/2018/MD2 | வார்டு எண் 43 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11871 /2018/MD2) | 5.00 |
| 17 | 11870/2018/MD2 | வார்டு எண் 44 க்குட்பட்ட அன்னையப்பன் வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11870 /2018/MD2) | 3.30 |
| 18 | 11869/2018/MD2 | வார்டு எண் 44 க்குட்பட்ட சக்தி நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11869/2018/MD2) | 3.30 |
| 19 | 11868/2018/MD2 | வார்டு எண் 46 க்குட்பட்ட ஜெயபிரகாஷ் நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11868 /2018/MD2) | 2.30 |
| 20 | 11867/2018/MD2 | வார்டு எண் 46 க்குட்பட்ட அம்பேத்கார் வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11867/2018/MD2) | 2.20 |
| 21 | 11866/2018/MD2 | வார்டு எண் 47 க்குட்பட்ட சங்கனூர் ரோடு பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11866 /2018/MD2) | 2.40 |
| 22 | 11865/2018/MD2 | வார்டு எண் 47 க்குட்பட்ட பகவத்சிங்புரம் பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11865/2018/MD2) | 2.90 |
| 23 | 11864/2018/MD2 | வார்டு எண் 55 க்குட்பட்ட P.N.பாளையம் பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. (ந.க.எண் 11864 /2018/MD2) | 9.50 |
| | | **மொத்தம்** | 87.00 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டியுள்ளதால் நிர்வாக அனுமதி வழங்க வேண்டி மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க எண். 11885/2018/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 502 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 38

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - மாதந்திர வணிகவளாகங்கள் 2018-2021- க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 25.10.2018-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடர்பாக.

பார்வை : 1. பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள். 25.10.2018.
2. மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்தரவு நாள். 09.11.2018

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2018-2021 மாதந்திர வணிகவளாகம் மற்றும் குத்தகை இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 25.10.2018-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் பெறப்பட்டதன் விபரங்கள் கீழ்க்கண்டவாறு

**அ)** ஏலம் நடைபெற்ற தேதி – 25.10.2018, வருடாந்திர குத்தகை இனங்கள்

| இனம் | குத்தகை இனங்கள் | அரசு நிர்ணயத் தொகை (ரூ) | ஏலதாரர் பெயர் | 10-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை ரூ. | உயர்ந்த பட்ச ஏலத் தொகை தொகை ரூ. |
| 4 | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 49,72,274/- | M.பழனிசாமி<br>S.முகமது சலீம்<br>C.K.விஸ்வநாதன் | 25,20,000/-<br>23,04,000/-<br>21,06,000/- | -<br>- | 25,20,000/- |

மேற்படி இனம் அரசு மதிப்பை விட குறைவாக உள்ளதால் மறு ஏலம் கோரலாம்.

| இனம் | குத்தகை இனங்கள் | அரசு நிர்ணயத் தொகை (ரூ) | ஏலதாரர் பெயர் | 12-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை ரூ. | உயர்ந்த பட்ச ஏலத் தொகை தொகை ரூ. |
| 5 | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 22,47,000/- (21,40,000 X 5% ) | A.மகாராஜா<br>K.சங்கர் | 7,55,550/-<br>7,32,555/- | -<br>- | 7,55,550/- |

மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் கடந்த ஆண்டு 2016-2017 அரசு மதிப்பு ரூ.9,47,000/-இருந்த நிலையில் ஏலத்தில் பங்குபெற்ற போட்டியாளர்களில் திரு.C.சாந்த குமார் என்பவர் 2017-18 ம் ஆண்டுக் குத்தகை தொகை ரூ.21,40,000/- ற்கு ஏலம் எடுத்தார். மேற்படி குத்தகை தொகை அதிகமாக உள்ளதாலும், தனக்கு நஷ்டம் ஏற்பட்ட காரணத்தினாலும், சுங்கம் வசூலிக்கும் பணியினை தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துவிட்டார். அன்னாரின் டெபாசிட் தொகை ரூ.2,00,000/- மாநகராட்சி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை இனம் மாநகராட்சியால் பன்னிரண்டு முறை ஏலம் விடப்பட்டது. இறுதியாக 12-வது முறையில் 25.10.2018 ஏலத்தில் A.மகாராஜா என்பவர் ரூ.7,55,550/- க்கும் திரு. K.சங்கர் என்பவர் ரூ.7,32,555/- க்கும் ஏலம் கோரியுள்ளனர்.

2017-18 ம் ஆண்டு மாநகராட்சி பணியாளரை கொண்டு ரூ. 8,06,090 /- துறை வசூல் செய்யப்பட்டுள்ளது. A.மகாராஜா அவர்கள் 2016-17 அரசு மதிப்பு ரூ.9,47,000/- ற்கு குறைவாக ரூ.7,55,550/- ஏலம் கோரியுள்ளார். 2016-17 அரசு மதிப்பு ரூ.9,47,000/- க்கு 5% உயர்வு செய்த தொகை ரூ.9,94,350/- ஆகும். 2018-19 ஏலத்தில் கோரப்பட்ட தொகை ரூ.7,55,550/- மற்றும் ஏலதாரர் கூடுதலாக ரூ.2,38,806/- செலுத்த சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மொத்த ஏலத்தொகை ரூ.9,94,356/- ஆகும். கடந்த ஆண்டு 2017-18 துறை ரீதியான வசூல் செய்த தொகை ரூ. 8,06,090 /- ஆக இருப்பதாலும் துறை வசூலில் 24 மணி நேரத்திற்கு 3 ஷிப்ட் முறையில் ஒவ்வொரு ஷிப்டிற்கும் தலா இரண்டு பேர் வீதம் வசூல் பணியில் ஈடுபட வேண்டியுள்ளது. மேற்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ஒரு நாளைக்கு 750 X 6 = 4,500/- வீதம் 30 நாட்களுக்கு 4500 X 30= 1,35,000/- வீதம் 12 மாதங்களுக்கு ரூ.16,20,000/- ஊதியமாக வழங்கப்படுகிறது. தற்போது 2018-19 –ல் ஏழு மாதங்களுக்கு ரூ.3,91,680/- துறை வசூல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2017-18 ல் துறை வசூல் ரூ.8,06,090/- ஆக இருப்பதாலும் மேற்கு மண்டலத்தில் ஏற்கனவே பணியாளர்கள் பற்றாகுறை உள்ள நிலையில் ஆறு பணியாளர்கள் வசூல் பணிக்கு பணியமர்த்தப்பட்டுள்ளதாலும், இதே போன்று பூமார்க்கெட் சுங்கம் வசூலிக்கும் பணியில் இரண்டு பேர் பணியமர்த்தப்பட்டுள்ளதாலும் மேற்கு மண்டலத்தில் பணியாளர் பற்றாகுறை ஏற்பட்டுள்ளது. மேற்படி ஏலதாரர் 2017-18 துறை ரீதியான வசூலை விட கூடுதலாக ரூ.2,38,806/- செலுத்த ஒப்புக்கொண்டு ஏலத் தொகை அதிகமாக கோரியுள்ளதால் மேற்படியாருக்கே குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆ) ஏலம் நடைபெற்ற தேதி – 25.10.2018, மாதந்திர வணிகவளாகக் கடைகள்

| இனம் | மாதந்திர வணிகவளாகக் கடைகள் | அரசு நிர்ணயத் தொகை மாதவாடகை ரூ. | ஏலதாரர் பெயர் | 2-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை ரூ. | உயர்ந்த பட்ச ஏலத் தொகை தொகை ரூ. |
| 4 | திருவேங்கடசாமி ரோடு தரை தளம் வணிக வளாக கடை எண்.10 | 31,800/- | E. விஜயக்குமார் | 32,000/- | -<br>- | 32,000/- |
| 16 | ராமச்சந்திரா ரோடு வணிக வளாக கடைகள் (கடை எண்-7) | 16,850/- | G.சீனிவாசன்<br>C.பங்காரு | 16,950/-<br>14,000/- | -<br>-<br>- | 16,950/- |

ஏலம் நடைபெற்ற தேதி – 25.10.2018, மாதந்திர வணிகவளாகக் கடைகள்

| இனம் | மாதந்திர வணிகவளாகக் கடைகள் | அரசு நிர்ணயத் தொகை மாதவாடகை ரூ. | ஏலதாரர் பெயர் | 1-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை ரூ. | உயர்ந்த பட்ச ஏலத் தொகை தொகை ரூ. |
| 17 | வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.1 | 6,000/- | B.சதீஸ்<br>R.சுந்தரம் | 6,240/-<br>6,200/- | -<br>- | 6,240/- |
| 17 | வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.2 | 6,000/- | P.மகேந்திரன்<br>R.சந்திரசேகர் | 6,150/-<br>6,310/- | -<br>- | 6,310/- |
| 17 | வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.4 | 6,000/- | M.கார்த்திகேயன்<br>R.சதீஸ்குமார் | 6,350/-<br>6,450/- | -<br>- | 6,450/- |
| 17 | வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.5 | 6,000/- | G.கோபால கிருஷ்ணன்<br>V.சரவணகுமார் | 6,100/-<br>6,200/- | -<br>- | 6,200/- |
| 18 | வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.3 | 3,250/- | G.ரமேஷ்<br>G.கார்த்திக் | 3,400/-<br>3,600/- | -<br>- | 3,600/- |

இ) ஏலம் நடைபெற்ற தேதி 25.10.2018 மாதந்திரா கடைகள்

| வ. எண். | வணிகவளாக கடைகள் |
|---|---|
| 1 | பன்னீர்செல்வம் பூமார்க்கெட் மேடை கடைகள் (மாதாந்திரவாடகை அடிப்படையில்) F67,F68, F70, F72,G85,G86, G87,H94 |
| 2 | ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகள்<br><br>(பிளாக்எண்.I-ல் கடை எண்கள்.3,4,5,6,7,11,12,13,14,15,17,18)<br><br>(பிளாக்எண்.II-ல் கடைஎண்கள். 19,20,21,22,26,27,28,,29,30,31,32,37,41,42,45) |
| 3 | மருதமலை அடிவாரம் கடைகள் கடை எண். 3, 4, 5 மற்றும் 6 வரை (தலா 180 சதுரடி) |
| 4 | மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி வடக்கு பார்த்த கடைகள் கடை எண். 3 முதல் 6,8 மற்றும் (தலா 160 சதுரடி) கடை எண். 10 (128 சதுரடி) |
| 5 | மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி கிழக்கு பார்த்த கடைகள் கடை எண். 1 முதல் 5 (தலா 80 சதுரடி) |
| 6 | திருவேங்கடசாமி தரை தளம் கடை எண். 8,11 மற்றும் முதல் தளம் கடை எண். 16 முதல் 30 வரை (தலா 160 சதுரடி) |
| 7 | கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலகம் அருகே கட்டப்பட்ட தலா 256 ச.துரடி அளவுள்ள கடை எண். 1 முதல் 3 வரை |
| 8 | கவுண்டம்பாளையம் வார்டு அலுவலகம் கடை எண். 1 (தலா 640 சதுரடி) |
| 9 | கவுண்டம்பாளையம் பிரபு நகர் மாநகராட்சி வணிகவளாகம் கடை எண். 4,8,9 மற்றும் 10 |
| 10 | ஆரோக்கியசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் புதிய கடை எண். 2 ,3, 4,11,12,13,27,28,31,37,மற்றும் 40 |
| 11 | ஆரோக்கியசாமி ரோடு மாநகராட்சி வணிகவளாக கடைகள் (தென்புறம்) கடை எண். 38 |
| 12 | ஆரோக்கியசாமி ரோடு ரூம்ஸ் மாநகராட்சி வணிகவளாக கடை எண். 15,16 |
| 13 | மேட்டுப்பாளையம் ரோடு பேருந்து நிலையம் 2-வது தளம் கடை எண்.1,2 மற்றும் 3 (தலா 1000 சதுரடி) |
| 14 | லிங்கனூர் ரோடு மாநகராட்சி வணிகவளாகம் தரை தள கடைகள் கடை எண். 4 மற்றும் 5. (தலா 192 சதுரடி) |

இனம் 4 –ல், திருவேங்கட சாமி ரோடு வணிக வளாக கடை எண்.10 -க்கு திரு. E.விஜயக்குமார் என்பவர் அரசு நிர்ணயித்த தொகை ரூ.31,800/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.32,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி மாதாந்திர வாடகை இனம் மாநகராட்சியால் பல முறை ஏலம் விடப்பட்டும் ஒருவரும் ஏலம் கோரவில்லை என்பதாலும், தற்போது நடைபெற்ற ஏலத்தில் ஒருவர் மட்டும் அரசு மதிப்பபைக் காட்டிலும் அதிகமாக ஏலம் கோரியுள்ளதால் திரு. E.விஜயக்குமார் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 16-ல், ராமச்சந்திரா ரோடு வணிக வளாக கடை எண்.7 -க்கு அரசு நிர்ணயித்த தொகை ரூ.16,850/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.16,950/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. G.சீனிவாசன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 17-ல், வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.1-க்கு அரசு நிர்ணயித்த தொகை ரூ.6,000/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.6,240/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. B.சதீஸ் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 17-ல், வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.2-க்கு அரசு நிர்ணயித்த தொகை ரூ.6,000/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.6,310/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. R.சந்திர சேகர் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 17-ல், வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.4-க்கு அரசு நிா்ணயித்த தொகை ரூ.6,000/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.6,450/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. R.சதீஸ் குமாா் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 17-ல், வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.4-க்கு அரசு நிா்ணயித்த தொகை ரூ.6,000/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.6,200/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. V.சரவணகுமாா் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 18-ல், வடவள்ளி பேருந்து திருப்ப முனை எதிரில் வணிக வளாக கடை எண்.3-க்கு அரசு நிா்ணயித்த தொகை ரூ.3,250/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.3,600/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. G.காா்த்திக் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

அ) இனம் 4-ல் உள்ள குத்தகை இனத்திற்கு அரசு மதிப்பைக்காட்டிலும் ஏலத்தொகை குறைவாக உள்ளதால், மறுஏலம் கோரலாம் மற்றும் இனம் 5-ல் உள்ள குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்யலாம்

ஆ) இனம் 4-ல் கடை எண் 10,இனம் 16-ல் கடை எண்.7,இனம் 17-ல் கடை எண்கள்.1,2,4 மற்றும் 5,இனம் 18-ல் கடை எண்.3 ஆகிய 4 இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்று மாதாந்திர வாடகை இனங்களை ஒப்படைப்பு செய்யலாம்.

இ) வரிசை எண். 1 முதல் 14 வரை உள்ள மாதாந்திர வணிக வளாக கடைகளை எவரும் ஏலம் கோர முன்வராததால் மறு ஏலம் கோரலாம்.

எனவே 25-10-2018-ல் நடைபெற்ற ஏலத்தில் வரிசை (அ)-ல் இனம் 4,குத்தகை இனத்தினை மறுஏலம் கோரவும், இனம் 5 குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்யவும், வரிசை (ஆ)-ல் 4 மாதாந்திர வாடகை இனங்களை ஒப்படைப்பு செய்யவும், வரிசை (இ)–ல் உள்ள மாதாந்திர வணிக வளாக கடைகளுக்கு மறு ஏலம் கோரவும், ஆணையாளா்/தனிஅதிகாரி அவா்களின் உத்திரவின்படி ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்புக்கு அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 1610 /2018 /A1(மே)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 503 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 39**

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் வாா்டு எண்.24க்குட்பட்ட அலுவலா் குடியிருப்பு மராமத்து செய்தல் பணிக்கு ரூ.12,75,000/– க்கு மதிப்பீடு தயாரிக்கபட்டுள்ளது. இப்பணிக்கு நடப்பு நிதியாண்டு 2017-18 ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிா்வாக அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 10370/2018/எம்டி2

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 504 நாள் 13.12.2018</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 40**

கோயம்புத்தூா் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் வாா்டு எண் 63-க்குட்பட்ட வாா்டு பகுதிகளில் சிமெண்ட் கான்கிரிட் தளம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,90,000/-க்கு இப்பணிக்கு மன்றத்தின் நிா்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:-12055/2018/எம்டி3

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 505 நாள் 13.12.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 41

பொருள்: திட்ட சாலை – கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம், வார்டு எண்.90 மற்றும் 91ல் அமையும் தொட்டராயன் கோவில் வீதியிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் விரிவு அபிவிருத்தி திட்டம் 3ன் படி உள்ள 100'0" அகல கிழமேல் சாலை – இதன் தொடர்ச்சியாக சுண்டக்காமுத்தூர் விரிவு அபிவிருத்தி திட்டம் 4 மற்றும் 7ல் அமையும் 'AA' 80'0" அகல திட்டசாலை – அபிவிருத்தி செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்பித்தல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம், வார்டு எண்.90 மற்றும் 91ல் பாலக்காடு சாலை – சுண்டக்காமுத்தூர் சாலையில் (பேரூர் ரோடு நெடுஞ்சாலை) இருந்து மேற்கு நோக்கி செல்லும் தொட்டராயன் கோவில் வீதி 100'0" அகல கிழமேல் சாலை சுண்டக்காமுத்தூர் விரிவு அபிவிருத்தி திட்டம் 3ல் கோவைப்புதூர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் (Neighborhood Scheme L.P.hid/T.P.No.179 என்ற அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி) த.சி.கா 4ஆம் அணி இடத்திற்கு தென்புறத்தில் அமைகிறது. இதன் தொடர்ச்சியாக 'AA' 80'0" அகல உத்தேச திட்டசாலையும் விரிவு அபிவிருத்தி திட்டம் 4 மற்றும் 7ல் அமைகிறது.

நிலையில் 100'0" சாலையில் வருவாய்த் துறை மூலம் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள ஏழை எளியவர்களுக்கு குடியிருப்பு பட்டா வழங்கப்பட்டுள்ளதாலும், ஒரு சில பட்டா வீடுகள் (17 குடியிருப்புகள்) த.சி.கா 4ஆம் அணிக்கு சொந்தமான இடத்தின் வழியாக அமைவதாலும், நேரடி பேச்சுவார்த்தை அடிப்படையில் Commando, 4th Battalion அவர்களின் முன்னிலையில் சாலைக்குண்டான பரப்பும் அதன் எல்லைகளும் நிலையில் அளவீடு செய்து எல்லைகற்கள் நடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் சாலைக்குத் தேவைப்படும் நிலப்பரப்பை தா.சி.க.4ஆம் அணியிடமிருந்து எடுக்கவும், திட்டசாலைப் பரப்புகளில் உள்ள சிறிய மரக்கன்றுகளை அப்புறப்படுத்துவதற்கும், மேற்படி திட்ட 100'0" திட்ட சாலையின் வடமேற்கில் த.சி.கா.4ஆம் அணியின் பாதாள சாக்கடை சேம்பர் அமைந்துள்ளதால் அதற்குண்டான நிலப்பரப்பையும் இடையூரின்றி செல்லும் வகையில் வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 'AA' 80'0" கிழமேல் சாலை அபிவிருத்தி செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் Land Plan Schedule நகரளவையர் மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது.

1. திட்ட சாலைக்கு உண்டான வரைபடத்தினை த.சி.கா 4ஆம் அணிக்கு அனுப்பி வைத்து நிலத்தினை ஒப்படைக்க கேட்டு கடிதம் அனுப்பவும்,
2. 'AA' 80'0" அகல திட்டசாலைக்கு தேவைப்படும் நிலத்தினை CBM கல்லூரிக்கு மேற்கே சுற்றுசுவர் ஊடே தேவைப்படும் பரப்பினை வழங்க கேட்டு கடிதம் அனுப்பவும்,
3. தானபத்திரம் நீங்கலாக இதர தனியார் பூமிகளை திட்டசாலைக்கு ஒப்படைக்க நில உரிமையாளர்களுக்கு கடிதம் அனுப்பவும்,
4. இதன் அடிப்படையில் தனியார் நில ஆர்ஜித பரப்பிற்கு நிலமதிப்பீடு நிர்ணயம் செய்து தர மாவட்ட வருவாய் அலுவலருக்கு கடிதம் அனுப்பவும்,
5. த.சி.கா 4ஆம் அணி இடத்தில் சாலை அமையும் பரப்பினை மாநகராட்சி பெயருக்கு மாற்றம் செய்யக் கோரி, த.சி.கா 4ஆம் அணி சிறப்பு காவல்படை மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பவும்,
6. மேற்படி திட்டசாலை வரைபடத்தின்படி சாலைக்கு உண்டான மதிப்பீடு, DPR தயார் செய்து உரிய நடவடிக்கை எடுக்க பொறியியல் பிரிவு மாநகர பொறியாருக்கு கடிதம் அனுப்பவும்,
7. மேற்படி உத்தேச திட்ட சாலை அபிவிருத்திக்கு உண்டான தொகை LPA நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்து தர மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், உறுப்பினர் செயலர் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கும் கடிதம் அனுப்பவும், மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 11565/2018/எச்1(தெ)/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 506 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 42**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கடந்த **04.04.2018** அன்று சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி சாலைகளில் மற்றும் பொது ஒதுக்கீட்டு இடங்களில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே பகுதிகளில் உள்ள பொது ஒதுக்கீடு இடங்களில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர்களை (On Site Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்தரவிட்டார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின் பேரில் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள **48, 49 50, 53, 68, 72, 73** மற்றும் **74** ஆகிய வார்டுகளிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் பூங்காவினுள் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர்களை அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின் வருமாறு :

| வ. எண். | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|
| 1. | 48 | ஜி.பி.எம் நகர் பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி.ந.க.எண்.12588 / 2018/ எம்டி5 | 7,00,000/- |
| 2. | 49 | மருதகுட்டி வீதி பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி.ந.க.எண்.12587 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| 3. | 50 | ஹட்கோ காலனி பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி.ந.க.எண்.12585 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| 4. | 50 | ராஜீ சாலையில் உள்ள சாலையோர பூங்கா இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி.ந.க.எண்.12584 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| 5. | 53 | கே.கே நகர் பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி.ந.க.எண்.12589 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| 6. | 68 | கன்னிகா பரமேஸ்வரி நகர் பூங்கா பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. ந.க.எண்.12591 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| 7. | 68 | இராமலிங்க ஜோதி நகர் பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. ந.க.எண்.12592 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| 8. | 68 | முருகன் நகர் பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. ந.க.எண்.12593 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| 9. | 73 | சுங்கம் நேரு மகளிர் பூங்காவில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. ந.க.எண்.12594 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| 10. | 74 | ஆறுமுகம் நகர் பூங்கா -1 பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. ந.க.எண்.12586 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| 11. | 74 | ஆல்வின் நகர் பூங்கா பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர் அமைக்கும் பணி. ந.க.எண்.12590 / 2018/ எம்டி5 | 7,00,000/ |
| | | **மொத்தம்** | 77,00,000.00 |

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி தனிஅலுவலர் மற்றும் ஆணையரின் அவர்களுக்கு ஒப்புதலுக்கு் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.12588 / 2018/ எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 507 நாள் 13.12.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

(ஒப்பம்). க. விஜயகார்த்திகேயன்,
ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,
கோயம்புத்தூர் மாநகராட்சி.